# கல்வெட்டு

18707

(தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் காலாண்டு இதழ்)

ஆனந்த ஆண்டு சித்திரைத் திங்கள்

இதழ் 1

அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்படும் புதிய கல்வெட்டுகள் அளிக்கும் வரலாற்றுச் செய்திகளை அறிவதற்கும், கல்வெட்டிலிருந்து அறியப்படும் பிற செய்திகளையும் கலைவரலாற்றையும், மக்கள் அறியும் வகையில் காலாண்டு ஆய்விதழ் ஒன்றை இத்துறை வெளியிடவேண்டும் என்று தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வு அறிவுரைக் குழு முடிவு செய்துள்ளது. இத்தீர்மானத்தினை இக்குழுவின் அங்கத்தினர், பேராசிரியர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதன்படி இவ்விதழ் வெளியிடப்படுகிறது. இது வரலாற்றுக்குப் பெரிதும் உதவவேண்டும் எனும் நோக்குடையது. கல்வெட்டு, கலை பற்றிய கேள்வி பதில் பகுதியும், கல்வெட்டுச் சொற்களுக்குப் பொருளும், வரும் இதழ்களில் வெளியிடலாம் என்ற எண்ணம் உள்ளது. இவ்விதழ் சிறக்க படிப்போர் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் கோடையில் இத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி பெற்றவர்களுக்கு 22-5-1972 ல் சான்றிதழ் வழங்கினார்கள். அவ்வமயம் அங்கு வைக்கப்பட்டு அவர்களது கவனத்தைக் கவர்ந்த ஒரு நடுகல்லினைப் பற்றி அரியதொரு உரை ஆற்றினார்கள். பல்வேறு பணிகளுக்கும் இடையில் தமிழகக் கல்வெட்டுகளில் ஆர்வம் காட்டி, வரலாற்றுப் பேராசிரியர்களும் வியக்கும் வகையில் அந்நடுகல்லின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துரைத்த அவ்வுரையை இவ்விதழின் தொடக்கக் கட்டுரையாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை

14-4-74

# என்னைக் கவர்ந்த கல்வெட்டு

தமிழக முதல்வர்



செங்கத்தில் உள்ள சிலையின் படமொன்றை இங்கே காணலாம். அச்சிலை என்னை மிகவும் கவர்ந்தது. வீரனொருவன் நிற்கின்றான். அவன் பின்னால் ஒரு நாய் நிற்கிறது. இதுதான் அந்தச் சிலையின் அமைப்பு. பல்லவர்களிலே பெரும் புகழ் பெற்ற மன்னன் மகேந்திரவர்மன் காலத்திய அது. எருமைப் பண்ணையின் காவலன் அவன். அவனைக் கள்ளர்

கள் வீழ்த்திவிடுகிறார்கள். வீரனுக்குத் துணையாக நின்ற நாய் அந்த அடி பட்ட வீரன் விழுந்து கிடந்த இடத்திலேயே, அவனை அடித்து வீழ்த்திய கள்ளர்களோடு போரிட்டு, அந்தக் கள்ளர்களை வீழ்த்தி வெற்றி கண்டது. இதைக் கல்வெட்டாக ஆக்கியிருக்கின்றார்கள். இன்றைக்குச் சிலை வைத்து, சிலைக்குக் கீழே யார் தலைவர், யார் திறப்பாளர் என்று எழுதினால் கூட கோபித்துக் கொள்ளுகின்ற புண்ணியவான்கள் எல்லாம் நாட்டிலே இருக் கின்றார்கள். அன்றைக்கு ஒரு நாய் இரண்டு பேரை அடித்துக் கடித்துக் கொன்றது. அதற்கு ஒரு கல்வெட்டு எடுத்தான். நன்றி மறவாதது நாய் மாத்திரமல்ல, அந்தக் காலத்துத் தமிழனும் நன்றி மறவாதவனாக இருந்தான் என்பதைக் காட்டிக் கொண்டான் அந்தக் கல்வெட்டின் மூலமாக.



எவ்வளவு அழகான கல்வெட்டு-

"கோவிசைய மயீந்திர பருமற்கு"

அவர்கள் மகேந்திரவர்மன் என்று எழுதினார்களோ. அல்லது மகீந்திர வர்மன் என்று எழுதினார்களோ, கல்வெட்டிலே இருப்பது

"கோவிசைய மயீந்திர பருமற்கு முப்பத்து நான்காவது; வாணகோ அரைசரு மருமக்கள் பொற்றெருக்கையார் இளமகன் கருந்தேவக்கத்தி".

காவல் காத்த அந்த வீரனுடைய பெயர் கருந்தேவக்கத்தி என்பதாகும். மகேந்திரவர்மனுடைய காலத்தில், 34-வது ஆண்டில், வாணகோ என்கின்ற அரசருடைய மருமக்களான பொற்றெருக்கையாருடைய இளமகன் கருந்தேவக்கத்தி,

"தன் எருமைப் புறத்தே வாடிபட்டான் கல்".

எருமைகளைக் காப்பாற்றுகின்ற அந்த காவல் கூடத்தில் அவன் கொல்லப்பட்டான்.

அந்த இடத்தில் "கோவிவன் என்னும் நாய்", நாயினுடைய பெயரே கோவிவன். இப்பொழுது ஏதேதோ பெயர்கள் வைக்கிறோமே, ஆங்கிலப் பெயர்களை நாடி-அப்பொழுது,

"கோவிவன் என்னும் நாய் இரு கள்ளரைக் கடித்து காத்திருந்த வாறு".

இப்படி அந்தக் கல்வெட்டிலே எழுதப்பட்டுள்ளது ஒரு நாயினுடைய வீரச்செயல்; அதற்கு முந்தி தான் எடுத்துக் கொண்ட பொறுப்பை கடமையுணர்வோடு செய்து, அங்கே கொல்லப்பட்ட ஒரு வீரனுடைய வாழ்க்கையை இந்தக் கல்வெட்டிலே அன்றைக்கு காண்பித்திருக்கிறார்கள் என்றால் இது நம்முடைய பழங்கால மன்னர்களால், பழங்காலத் தமிழர்களால், தமிழ் நாட்டு மக்களால் எவ்வளவு போற்றப்பட்டிருக்கிறது என்பதனை நாம் அறிந்துகொள்ள முடியும்.



# தமிழகத்திற்கு நாவலர்



தந்த பரிசு

ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டில் மக்கள் வாழத் தொடங்கிய நாட்களிலிருந்து இன்றுவரை, சமுதாயம், சமயம், கலை முதலிய பல்வேறு துறைகளில் பெற்ற வளர்ச்சியை உரைப்பதாகும். இவை அனைத்திலும் அவ்வப்போது தோன்றும் கருத்துக்களின் வளர்ச்சி அனைத்தையும் எடுத்துரைப்பவை, அக்காலத்தோர் விட்டுச் சென்றுள்ள சான்றுகளே. பழமையே பெரிதென்று போற்றுவோர்கள் உண்டு. கடந்த இருநூறு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளே வரலாறு என்று சாதிப்போரும் உண்டு. இரண்டு நிலைகளும் ஏற்கத்தக்கவை அல்ல. பல்லாயிரம் ஆண்டு களாகச் சிறந்த நாட்டில் அந்தந்தக் காலத்துக்கு உரிய இடத்தை அளித்து அறிவதே சிறந்த வரலாறு.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்த வரலாற்றை எடுத்துரைக்க ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை இன்றியமையாத கல் வெட்டுகள். உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு கல்வெட்டுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன.

இருப்பினும் நம்நாட்டில் தமிழக வரலாறு உரிய இடத்தைப் பெற வில்லை. ஆங்கிலேய கவர்னர்கள், துரைகள் இவர்களது மிகச் சிறிய செயல்கள் கூட மிகப் பெரியதாக எழுதப்பட்டு இன்றும் காணப்படு கின்றன.

இதற்கு வரலாறே காரணம். ஆங்கில ஆட்சி இருந்தவரை நமது வரலாறு மறைக்கப்பட்டு அவர்களது நடவடிக்கைகளே பாட நூல்களில் இடம் பெற்றிருந்தன. அவர்கள் சென்ற பிறகு எவ்வளவோ சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருப்பினும் பழைய நிலையில் அதிகம் மாறுதல் இல்லை. இதற்கு ஒரு காரணம் அடிப்படைச் சான்றுகளான கல்வெட்டுக்களையும், கலையையும் வரலாற்றையும் இணைத்து அறியக் கூடிய வரின் எண்ணிக்கை அதிகரித்தாலொழிய வரலாற்றை எழுதுவதில் தரம் உயர வழியில்லை. கலையைப் போற்றுவோர் அதிகரிக்க இடமில்லை. சுற்று லாவுக்கு வருவோருக்கு எடுத்துரைக்கும் ஆற்றல் மிகுந்தோர் இருப்பது இல்லை. ஆதலின் இந்த அடிப்படைக் காரணத்தை அறிந்து அதை மாற்றும் பணியை மேற்கொண்ட பெருமை நமது தமிழக கல்வித்துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையே சாரும். அனைவரும் கல்வெட்டைப் படிக்கும் வகை செய்ய வேண்டும் என்பது அவர்களது அவா.

அவர்களது நேர்முக ஆர்வத்தினாலும், ஊக்கத்தினாலும் தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத்துறை கடந்த நான்கு ஆண்டுகளாக கோடை யில் கல்லூரி, பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வெட்டுப் பயிற்சி அளித்து வரு கிறது. இது ஆசிரியப் பெருமக்களிடையே பெரும் எழுச்சியையும், விழிப் பையும் ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு நாவலர் அவர்கள் மற்றொரு அழியாத செல்வத்தை யும் தமிழகத்துக்குத் தந்துள்ளார்கள். கல்வெட்டுக் கலை அறிந்து கொள்ள ஓராண்டு படிப்பு, டிப்ளமா பெறும் வகையில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை (Institute of Epigraphy) இத்துறையின் கீழ் நிறுவியுள்ளார்கள். இதன்கீழ் எட்டு எம்.ஏ. பட்டம் பெற்ற மாணவர் கள் பண்டைய வட்டெழுத்து, தமிழ் எழுத்து, வரலாறு, கலை முதலியன பயின்று வருகிறார்கள்.

சில கல்லூரிகளிலாவது கல்வெட்டைச் சிறப்புப் பாடமாக வைக்க வேண்டுமென்பது நாவலர் அவர்களது விருப்பம். விரைவில் அதுவும் நிறைவேற்றப்படும் என்பதில் ஐயம் இல்லை. இவை தமிழக வரலாற்றுக்கு நாவலர் அவர்கள் ஆற்றியுள்ள புகழ் மிக்க தொண்டு என்பதை வரலாறே கூறும்.

---

## அருணகிரிநாதர் காலம் என்ன?

திருப்புகழ் தந்த அருணகிரிநாதர் காலம் எது? இவர் 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று இது காறும் கூறினர். ஆனால் இவர் 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஒரு கல்வெட்டு இச்செய்தியைக் கூறு கிறது. திருவண்ணாமலையில் உள்ள இந்தக் கல்வெட்டு, **சம்பந்தாண்டான்**, அருணகிரி, சோமநாத ஜீயர் என்னும் மூவரையும் கூறுகிறது. இதன்படி கி. பி. 1340-ல் அருணகிரிநாதர் வாழ்ந்தார் என்பது தெளிவு.

# கொங்கு நாட்டில் கலவரம்

*சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் ஓர் எல்லைக் கலவரம் நடந்தது. காங்கேய நாட்டுக்கும் பூந்துறை நாட்டுக்கும் நடந்த சண்டை இது. இதில் காங்கேய நாட்டு சர்க்கரைக் கவுண்டரும், பூந்துறை நாட்டாரும் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டனர். சர்க்கரைக் கவுண்டரின் வீரர்கள் 30-40 பேர் இறந்தார்கள். பூந் துறை நாட்டார் 40-60 பேர் இறந்தார்கள்.*

*அப்பொழுது கொங்கு நாடு மதுரை ஆட்சியின் கீழ் இருந்தது. திருமலை நாயக்கரின் அண்ணன் முத்துவீரப்பர் அப்பொழுது ஆண்டு கொண்டிருந்தார். முத்துவீரப்பர் விஜயநகர அரசின் பிரதிநிதியாக ஆண்டார். அவர் ஓர் அரசாங்க அதிகாரி (அரண்மனை மனுஷர்). அவர் பூசலைத் தீர்த்து வைத்தார். அதற்கு இரு திறத்தாரும் ஓலை எழுதிக் கொடுத்தனர். இவ்வோலை மேலோலை என்று குறிக்கப் படுகிறது.*

*டாக்டர் மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள், கொங்கு நாட்டில் சேகரித்த சாசனங்களில் சில காகிதங்களில் படி எடுக்கப்பட்டு இப்பொழுது உ. வே. சா. நூலகத்தில் உள்ளன. அவற்றில் 5 வெவ்வேறு சாசனங்களின் படி உள்ளன. அவற்றின் தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் எங்கிருந்து யாரால் படி எடுக்கப்பட்டன என்ற விவரங்கள் இல்லை மேலே "கொங்கு" என்று உ. வே. சா. கைப்பட எழுதியுள்ளார்கள். இப்படிகளில் பல மெய் எழுத்துகளுக்குப் புள்ளி இடவில்லை. பிழைகளும் நிறைந்துள்ளன. சில சொற்கள் கொங்கு நாட்டுக் கொச்சைச் சொற்களாகக் காணப்படுகின்றன. திருத்தத்தோடு அவற்றில் ஒன்று இங்கு அச்சிடப்படுகிறது. இதைக் கொடுத்து உதவிய உ. வே. சா. நூலகத்தாருக்கு எமது நன்றி.*

# பூந்துறை நாட்டார் கொடுத்த மேலோலை

சுவஸ்தி ஸ்ரீ மன்மாக மண்டலேசுரன் மகாமண்டலேசுரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புலவாய கண்டன், கண்ட நாடு கொண்டு, கொண்டநாடு குடாதன், மூவரிராய கண்டன், கட்டாரிச் சாளுவமீசுரகண் டன், துட்ட நிற்கிற சிட்டபரிபாலன் எம்மண்டலமும் யீளமும் யிலங்காபுரி யுந் திறை கொண்டருளிய ராசாதிராசன், ராசபரமேசுர னிராசாமாத்தாண்ட னிராச வல்லவன், ராசபுங்கவன், ராசகேசரி ராசராசநவரற்றின நாராயணன், துலுக்கர் தளவிபாடன், துலுக்கர் மோகந் தவிள்த்தான், யிரணது பரராமன், துஷ்ட்ட நெஷ்டடுர கொட்டர், கோலாகலன், மதியாத மன்னர் மகுடஞ் சிதறப் பதி சூறை கொள்ளும் பரசுராமன், அசுபதி, கெசபதி, நரபதி நவகோடி நாராயணன், அங்க வங்கழர், கலிங்கர், கேரளர், மகதர், வங்களர், துலுக்கர், கெவுடர், மத்தகர் கோச்சர், அவுணர், மறவர், மலையாழர், கொங்கர், கம்பளர், குகுதர், குச்சரர், கொந்தழர், ரெட்டியர், தெலுங்கர்,

துளுவர், துக்கரர், சல அட்டகர், மருட்டகர், மருடர், றம்மிக்கர், மபோசர், கோசலர், ஆரியர், பப்பரர், கன்னுடர், சோனகர், சீனகர், மலையாழர், மலை தேவி விபாடர், மத்தக கொடொரி, பதினெட்டுக் கோட்டத்து, மன்னிய் கண்டன் நவனதிபுடை சூள்(ர)கிய பூலோக புரந்தரர், உத்தரர் தெட்ஷண பூறுவ பட்ஷம சதுச் சமுத்தராதிபதி, வீரதீர சேர சோழ பாண்டியர், வல்லாழ பயங்கர தேவராயர், வீரமதராயர், மல்லிகார்ச்சுனராயர், விருப் பாட்ஷிப் பொபொலராயர், வல்லாழராயர், பிரவுடதேவராயர், வெங்கிட பதராயர், கிஷ்ட்டணராயர், இராமதேவராயர், சிக்கராயர், சக்கராயர், இஷ்ட்டிரங்களாயர், காரியற்துக்குக் கர்த்தரான கச்சிப் பதியை யுடைய விசுவநாத கிஷ்ட்டணப்ப முத்து வீரப்ப நாயக்கரய்யனவர்கள், மதுரை பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம், வலமண்டல முதலாயப் புடவி சூழ்ந்த இருநூற்வக்காத வட்டகையும், வறுதி சுத்தமாக செங்கோல் நீதி ஓதியுணர்ந்து உலக முழுதாண்டு மும்மூர்த்தியும் முத்தமிழ் விநோதன், சரி படை தாங்குந் தானவிநோதன், அளிக்குச் சந்திரன், ஒளிக்குக் கதிரோன், அறிதகவுக் ககஸ்தியன், அறதத்ததுக்கு அரிச்சந்திரன், மறதத்ததுக்கு வன்னி, சொல்லினில் தருமன், தோழினில்[1] வீமன், வில்லினில் விசையன், வாளினில் பீமன், பரிதனில் நகுலன், கரிதனி லுதையன், போகத்தி லிந்திரன், புகளினில்ப் போசன், செலத்தினில் வாரி, நடுவினி லியமன், தயிரியத்தில் நிருதி, தனத் தில் குபேரன் எனப் புகழ்படைத்து, யின்சொலா லினிதளித்து, வன் சொலால் மறங்கடிந்து, அளுங்குளவிக்கு[2] அன்புடைய தாயேபோல், அனைத்து உயிர்களுக்கும் இனிமையே நல்கி, சற்குண நான்கும் வள்ளுவருரைத்த முப்பால் மொளியும்[3] படியே அறிவையறிந்து, அல்லவை கடிந்து, நல்லவை நாட்டி இப்படி செங்கோல் நீதி வளுவாமல் நடத்தி வருகிற காலையில்,

கொங்கு மண்டலம் ராதாபுரஞ் சீர்மையில் காங்கய நாட்டில், சக்கரைக் கவுண்டர் சீர்மை காரையூருக்கு மேல்கரைப் பூந்துறை நாட்டில் அரச்சலூருக்கும் எல்லைப் பிக்கைகாய் சக்கரைக் கவுண்டர் வஞ்சியங்குளத் திலே கொட்டை போட்டும் அரச்சலூரரர் சேனுபதிபாளையத்திலே கொட்டை போட்டும் வெகு மோதண்டங்களாய் சக்கரைக் கவுண்டர் வகைச் சேவு கரிலே முற்பது நாற்பது பட்டும், அறச்சலூர் பூந்துறை நாட்டார் வகையிலே நாற்பது அறுபது பட(க), படக்குடுத்தும் இப்படி மோதண்டங்களாய் சண்டையாய்க் கிடந்தபடியினுலே இருபத்துநாலு நாட்டாரும் ராதாபுரம் சீர்மைக்குக் கற்த்தராய் வந்த அரமனை மனுஷர், திம்மப்ப முதலியாரவர் களும், ராதபுரந் தலத்துச் சம்பிறுதி தக்ஷிணமூர்த்திய்யன், திருவாளிப் பிள்ளை தலத்துச் சேர்வை எல்லாரிமாவுத்தர், தளவாய்த் திருமலை நாயகர், சிட்டராவுத்தர், நஞ்சையநாயகர், நயினப்ப நாயக்கர், இராமய நாயக்கர் கொளுமம் வாலாரசர் இவர்கள் அனைவருங் கூடித் தீர்த்தது. சக்கரைக் கவுண்டர் கையயெளு[த்து]ப்பட மெலோலை பூந்துறை நாட்டாருக்குக்

1. தோளினில்.
2. அழுங்குழவிக்கு.
3. மொழியும்.

கொடுத்து பூந்துறை நாட்டாரனைவருங் கூடி நாட்டார் கையெழுத்துப்பட எழுதிக் குடுத்த மேலோலைப்படி,

கலியுகசகாற்த்தம், சகதுளாய்அ க்கு மேல் செல்லா நின்ற பிங்கள வருஷம் ஆடி மீ ய-உ-பூர்வ பக்ஷமும் திசமியும் பெற்ற மங்கள வார நாள், அனைவருங் கூடி இசகு தீர்த்து நடந்ததுக்கு விபரம்.

திம்மப்ப முதலியாரவர்களும், இருபத்து நாலு நாட்டாருக்கு துறையிலிறங்கி திம்மப்ப முதலியாரவர்கள் ஆனையின்[4] பேரிலே ஏறிக் கொண்டு, நாடனைவரும் குதிரையின் பேரிலே ஏறிக்கொண்டு, நடந்து கல்ப்[5] போட்டுக் குடுத்ததுக்கு விபரம்.

காங்கய நாடு அறச்சலூருக்கும் நடு எல்லைக்கும்ங் கிணறு இதன் கிளக்குச் சென்னயக் கல்லு இதன் கிளக்கு வளஞ்சியங் குளம் ஏரிக்குத் தெற்கு நல்லமங்கைபுரம், காரையூற்காடு ஏரிக்கு வடக்கு, அறச்சலூர்க் காடு இதன் கிளக்குக்(க) கருங்கல்மேடு இதன்கிழக்குத் தாந்தூக்கிப் புளிய மரம், இதன் கிளக்கு நெடுஞ் சாத்துக் கருந்தேவன் குதிச்ச கல்லடுக்கு, இதன் கிளக்கு நல்லாகட்டிப் பாளையத்துக்கு வடக்கு இலவந்தத்ததுக்குத் தெற்குக் காரைமடைக் கல்லடுக்கு;

இந்தப் படிக்கு திம்மப்ப முதலியாரவர்களும் இருபத்து நாலு நாட்டாரும் இம்மட்டும் நடந்து தேறுகடை பண்ணி தீர்ந்தபடிக்கு நாங்கள் நாடனைவரும் சக்கரைக் கவுண்டருக்கு மேலோலை கொடுத்தோம். இதற்கு பூந்துறை அளப்பிச்சாக் கவுண்டர் வெள்ளொட்டு முதலியாக் கவுண்டர் நசையனூர்ப் பிறப்பணக் கவுண்டர். எளுமாத்தூர் விசுவநாதச் சின்னையக் கவுண்டர், வெட்டுவரிபவப் பட்டாலிக் கவுண்டர், அறச்சலூர்ப் பொட்டக் கவுண்டர், முருங்கைப் பெருந்தோசத் தீத்தாக் கவுண்டர் அனுமப்பள்ளி சர்க்கரைக் கவுண்டர், கீங்கூர் செங்கோடக் கவுண்டர் இந்தப் படிக்கு அனைவரும் சம்மதித்தோம்.

இதிலே ஆதாமொருவர் இசகினல்[6] அரமனைக்கு ஆயிரத்திருநூறு பொன்னும் அவதாரமிறுத்து, ஆய்க்கினையும் பட்டு, எல்லையும் இளந்து, போகக் கடவனுகவும். இப்படி தீர்ந்துது. இதற்கு இசகு இல்லை. கற்த்தாக்கள் பாதத்தவணையே, திம்மப்ப முதலியாரவர்கள் பாதத்தாணையே இருபத்து நாலு நாட்டாரவர்களாணையே, இதுக்குத் தப்பாது. இந்தப்படி எல்லை யனுபவிச்சுக் கொண்டுவரக் கடவோராகவும்.

இதற்குச் சாக்ஷி தென்கரை நாடு வேணுவுடையாக் கவுண்டர். தலைய நாடு வெள்ளக் கவுண்டர், சிறிவியாக் கவுண்டர், பொம்மய நாயக்கர், வெங்கல நாடு காளத்தி கவுண்டர், மணல் நாடு தெண்ணிலி அனந்த

4. ஆனையின்.
5. எல்லைக் கல்.
6. பிசசினல்.

கவுண்டர், அரைய நாடு தலையநல்லூர் நாச்சியப்ப கவுண்டர், கொந்தழம் முட்டத்து ராயன், காங்கய நாடு காங்கய மண்ணுடியார் பல்லவராயக் கவுண்டர், குறுப்பு நாடு விசைய மங்கலம் வட மலைக் கவுண்டர், திங்களூர் சிதம்பரக் கவுண்டர், புங்குலிக்க நாடு வெளராசி அவுஞசிக் கவுண்டர், பெருந்தொழூர்ப் பிடாரப்பக் கவுண்டர், கண்டியங் கோவில் உடையாக் கவுண்டர், ஆற்காடு மச்சக் கவுண்டர், சோளியாண்டக் கவுண்டர்,[7] சத்திய மங்கலத்தார் ஸ்தாணுதிபதி தளஞ்சனூரங்கப்ப நாயக்கர், தலத்தாரில் எல்லாரி மாவுத்தர் தளவாயத் திருமலை நாயக்கர் சாக்ஷி. இந்த மேலோலை தலந் திருவாளிப் பிள்ளை கைய் எளுத்து. சென்னி மலையப்பராலட்ஷ்டிக்கவும். இந்த மேலோலை பளங்கடையாச் சீரணமாயிருந்த படியினலே சபாது[8] எளுதினது. காரையூர் தலத்துக் கணக்கு அரசபிள்ளை கைய்எளுத்து. ஜயங்கொண்டீசுரர் லட்சிக்கவும். பெரியோர்கள் பொறுத்தருளவும். அளப் பிச்சான் முதலி பிறப்பணன் சின்னையன் பட்டாலி பொட்டன் தீத்தான் சாதகணன் செங்கோடன்.

---

7. சோழியாண்டக் கவுண்டர்.
8. சரிபார்த்து.

| | | |
|---|---|---|
| இசகு | : | பிசகு, முறைகேடு |
| பிக்கைகாய் | : | பிசைகாய்—பிசகாய் என்பதன் திரிபாக இருக்கலாம். |
| தேறுகடை | : | தீர்மானம் |
| அவதாரமிருத்து | : | அபராதம் கொடுத்து |
| மோதண்டங்களாய் | : | மோதல்களாய் |
| ராதாபுரம் | : | தாராபுரம் |
| ஆய்க்கிணை | : | ஆக்ஞை என்பதன் திரிந்த வடிவம்; ஆணை என்பது பொருள் |
| சகாப்தம் சசூளாயிஅ | : | சக ஆண்டு 4718 = கி. பி. 1617. |

---



இது யாருடைய காசு?

விவரங்கள் அடுத்த இதழில்!

# தஞ்சை ஓவியமும் தடுத்தாட்கொண்ட புராணமும்

நடன. காசிநாதன், எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

நலத்தான் சிறந்து விளங்கிய திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னும் திருப்பதியில் வாய்மை குன்றாதத் திருமறையவர் பலர் வாழ்ந்து வந்தனர். அவருள் மாதொருபாகனுர்க்கு வழிவழி அடிமை செய்யும் சடையனுர் என்பவர்க்கும் இசைஞானியார் என்ற அம்மையாருக்கும் பிள்ளையாய் நம்பியாரூரர் திரு அவதாரம் செய்தார்.

நாடாளும் வேந்தன் நரசிங்க முனையரென்பார் பிள்ளைப் பருவத்திலிருந்தே நம்பியாரூரரை அவரது பெற்றோர்களிடமிருந்து பெற்று சொந்தப் பிள்ளையாக எண்ணி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். நம்பிஆரூரர் தமது இளமைப் பருவத்திலேயே எல்லாக் கல்வி நலங்களையும் பெற்றுத் திகழ்ந்தார். மணப்பருவம் வந்தது பெற்றோர்கள் பெண் பார்க்கத் தலைப்பட்டனர். புத்தூர் என்னுமூரில் சடங்கவி என்ற அந்தணர்குலப் பெண்ணை மணம் பேசினர். மணநாள் வந்தது மண மகனை அலங்கரித்து வீதி உலா அழைத்துச் சென்றனர். அழைத்துச் செல்கையில் கண்ணுற்ற மக்கள் கூட்டம் என்ன செய்தது என்பதை,

> 'கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காணவென்பார்
> பெண்களிலுயர நோற்றாள் சடங்கவி பேதை யென்பார்
> மண்களிகூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்
> பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடுவார்கள்'

என்று தடுத்தாட்கொண்டபுராணத்தில் விவரிக்கப்படுகிறது.

அவ்வாறு நிகழும் மக்களின் எண்ண அலைகளினூடே உலாச் சென்று மணம் நிகழவிருந்த மணப்பந்தரை அடைகிறார் நம்பிஆரூரர். வேதியர் வேதம் ஓத எத்தனிக்கின்றனர். மறையவர் கூட்டம் இந்த ஒப்பரும் நிகழ்ச்சியைக் கண்ணுற குழுமிய வண்ணம் இருக்கிறது. அப்பொழுது முதியவர் ஒருவர் உள்ளே நுழைகிறார். நுழைந்தவர் மணத்தொழில் தொடங்கும் பந்தரிடை நம்பியின் எதிரில் நின்று 'இந்த மொழி கேண்மின் எதிர் யாவர்களும்' என்கிறார். ஆங்கு அமர்ந்திருந்த அருமறை அந்தணர் யாவரும் ஆச்சிரியத்தால் தலை நிமிர்த்தி "நன்றுமது நல்வரவு. இவண் நீர்மொழியின் நீர்மொழிவ" தென்றார். 'யான் ஒரு வழக்கினைக் கூறப்போகிறேன். அவ்வழக்கைத் தீர்த்த பின்னர் உம் கடமையை ஆற்றுங்கள்' என்று வந்தவர் கூற, 'உமது வழக்கைக் கூறுங்கள். அது முடிந்த பின்னரே வதுவையை ஆரம்பிப்போம்' என்றனர் அவையில் குழுமியிருந்தவர்களும்.

உடனே 'இந்நாவலூரன் எனது அடிமை' என்று இவ்வுலக உயிர்கள் அனைத்தையும் ஆட்கொண்டுவிட்ட இறைவனுகிய அம்முதியவர் கூறினர் இவர் உமது அடிமையெனில் ஆதாரம் ஏதேனும் உண்டோ என்று மறையவர்கள் புகல "இந்நாவலூரானின் பாட்டன் எழுதிய ஆள்விலை ஓலை இதோ உளது" என்று கூறி அதை அவையின் கரணத்தான் முன் நீட்டுகிறார். அவையின் கரணத்தான் அவ்வோலையை வாங்கிச் சுருளைப் பிரித்து நன்றாக விரித்து, எழுதியுள்ள வாசகங்களை அவையின் முன் படிக்கிறான். அவையோரும், நாவலூராரும் ஆச்சரியத்தால் பதுமையாகின்றனர் பின்னர் அவையோர் ஆரூரரைப் பார்த்து 'நீர் தோற்றீர்'; இம்முனிவர்க்கு 'பான்மையினேவல் செய்தல் கடன்' என்று விளம்புகின்றனர். 'விதி

முறை யிதுவேயாகில் யான் இதற்கு இசைகிறேன்' என்று நாவலூராரும் உடன்படு கின்ருர். பின்னர் இறைவன் தாம் யார் என்பதைத் தெரிவித்து நாவலூராரை இல்லற வாழ்வில் நுழைய விடாது தடுப்பதே தனது நோக்கம் என்று கூறி ஆட் கொண்டு விட்டார் என்கிறது தடுத்தாட்கொண்டபுராணம்.

மேற்கூறிய இப்புராணத்தின் வழக்காடும் காட்சியைத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் உண்ணுழியின் பின்பக்கச் சுவரில், சோழர் காலத்து ஓவியன் ஒருவன் தமது கைவண்ணத்தாலும் சிந்தனைத் திறனுலும் உயிரோவியமாக நம் கண்முன் காட்டியுள்ளான்.

ஓவியத்தில் மண்டபம் காட்டப்பட்டுள்ளது. மண்டபம் சாதாரண மண்டபம் அல்ல. பல தோரணங்கள் நிறைந்த மண்டபம். தோரணத்தின் நடுவில் இரு நிலை மாடம் தீட்டப்பட்டிருக்கிறது. தோரணத்தின் கீழ் வரி காணப்படுகிறது. வரியையும் தோரணங்களையும் தாங்கி ஐந்து தூண்கள் நிற்கின்றன. மூன்று தூண்கள் நடுவிலும், இரண்டு தூண்கள் சுவரோடு ஒட்டியும் தீட்டப்பட்டுள்ளன. தூண் போதிகை, தாமரை இதழ் விரிந்த நிலையில் காணப்பெறும் பலகை ஆகியவைகளை உடையதாக இருக்கின்றன. தூணின் அமைப்பும் தோரணத்தின் எழிலுமே இது சோழர் கால ஓவியம் என்பதைத் தெளிவாக்கிவிடுகின்றன.

மண்டபத்தின் நடுவில் மறையவர்கள் பலர் கூடியிருக்கின்றனர். அனைவரும் அமர்ந்த நிலையில் உள்ளனர் முதியோராய் அமர்ந்திருப்போரின் கைகளில் ஓலைச் சுவடி காணப்படுகிறது. அந்த ஓலைச்சுவடிகள் வழக்கு மன்றத்தில் சந்தேகம் ஏற்படும்பொழுது பார்த்துக் கொள்வதற்கு உதவும் சட்ட நூல்களாக இருக்கலாம். மறையவர்கள் அனைவரும் அரையில் மட்டும் ஒரு வெண்துகில் உடுத்தியிருக்கின்றனர். அதுவும் முழங்கால் அளவுக்கே நீண்டுள்ள பஞ்சகச்சமாய்க் காட்சியளிக்கிறது. தோளில் ஒரு வெண்துகில் மட்டுமே காணப்படுகிறது ஒவ்வொருவர் மார்பிலும் பூணூல் காணப்படுகிறது. அனைவரும் குடுமி உடையவராய் பெரும்பாலோர் தாடி மீசை உடையவராய் காட்சி அளிக்கின்றனர். நெற்றியில் திருநீறு காணப்படுகிறது. அது அவர்கள் சிவாசார்யர்கள் என்பதைத் தெரிவிக்கிறது.

இவர்கள் மத்தியில் வயோதிகர் ஒருவரும் வாலிபர் ஒருவரும் நேருக்கு நேர் நிற்கின்றனர். வயோதிகர் அரையில் கோவணத்தையும் தோளில் வெண்துகிலைப் பூணூல் அணிவதுபோன்று சுற்றியும் அணிந்திருக்கிருர். தலைமயிர், தாடி ஆகியவை நரைத்து அவருடைய வயோதிகத் தன்மையைப் பறை சாற்றுகின்றன. குழையணியத்தக்க தாழ்ந்த காதுகளைக் கொண்டிருக்கிருர். வலது கையில் விரித்த ஓலையும் இடது கையில் குடையுமாக, நேரே நிமிர்ந்து நிற்க முடியாது சிறிதே கூனி நிற்கும் நிலை. கண்களிலே ஒரு கம்பீரப் பார்வை. வாய் ஏதோ கேட்கும் நிலை. சித்திரத்திலே தீட்டப்பட்டுள்ள இந்த உருவையும் தடுத்தாட்கொண்டபுராணத்தில்,

'காதிலணி கண்டிகை வடிந்த குழை தாழச்
சோதிமணி மார்பினசை நூலினெடு தோளின்
மீதுபுனை யுத்தரிய வெண்டுகினுடங்க
ஆதபம் மறைக்குடை யணிக்கரம் விளங்க

பண்டிசரி கோவண உடைப் பழமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை யார்ந்தழகு கொள்ள
வெண்டுகிலுடன் குசை முடிந்து விடு வேணுந்
தண்டொருகை கொண்டு கழல் தள்ளு நடை கொள்ள'

என்று கூறப்பட்டிருக்கும் சிவபெருமானின் வயோதிகத் தன்மையையும் ஒப்பு நோக்கினல் இவ்வுருவத்தைப் பார்த்துத்தான் சேக்கிழார் பெருமான் சித்தரித்தாரோ என்று எண்ணும்படியாக அமைந்துள்ளது.

நம்பிஆரூரர் பார்த்தாரைப் பரவசப்படுத்தும் பருவத்தினராய், களை ஒழுகும் முகத்தினராய், அழகே உருவாய்க் காட்சி அளித்தார் என்றெல்லாம் தடுத்தாட் கொண்டபுராணம் பேசும்,

'மன்னவர் திருவுந் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியாரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவி மேற்கொண்டு போந்தார்'

என்ற வரிகளின் வாயிலாக.

இவ்வோவியத்திலும் அவரது அழகு பொருந்திய உருவம் மிக உன்னத நிலையில் தீட்டப்பட்டுள்ளது. ஆனால் அவரது நிலை மிகவும் அஞ்சி நடுநடுங்கி என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கும் நிலையாக உள்ளது. சுந்தரர் நிற்கும் தோற்றத்தைக் காண்கையிலேயே அவர் வழக்கில் தோற்றுவிட்டார் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

வயோதிகராய் வந்த இறைவனின் கையில் ஒரு ஓலையும், சிவாச்சாரியார்களின் கையில் ஒரு ஓலையும் காணப்படுகின்றன. இதில் சிவாச்சாரியார்களின் கையில் உள்ள ஓலை "அவையிலே முதியவரைப் பார்த்து நீவிர் கூறுவதற்கு ஆதாரமாக

"ஆட்சியில் ஆவணத்திலன்றி மற்றயலார் தங்கள்
காட்சியின் மூன்றிலொன்று காட்டுவாய்"

என்று மறையவர்கள் கேட்க, முதியவரும் தாம் வைத்திருந்த ஓலையை எடுத்துக் கொடுத்து நீங்கள் இதிலே காணலாம் என்று காட்ட, அதை வாங்கிப் பார்க்கின்ற ஓலையாக இருக்கலாம். அதைப் பார்த்த மறையவர்கள் அனைவரும் திகைக்கின்றனர். ஒருவரையொருவர் ஆச்சரியத்தால் பார்த்துக் கொள்கின்றனர். சிலர் சுந்தரரைப் பார்க்கின்றனர். கரணத்தான் கையிலே தரப்பட்டிருக்கின்ற ஓலையில் 'இப்படி அறிவேன் [இர]வேளைப் பகலாக' என்று சோழர் கால எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வெழுத்துக்களும் அவ்வோவியம் சோழர் காலத்தைச் சார்ந்தது என்பதை நிரூபிக்கின்றன. எழுத்துக்கள் காணப்படும் அப்பகுதி ஓலையின் இறுதிப் பகுதியாகும். ஓலையிலே சாட்சிகளாகக் கையொப்பமிட்டுள்ள பகுதியாகும். எனவே இதைக் கண்ணுற்ற அனைவரும் ஒத்துக் கொண்டு சுந்தரர் முதியவரின் அடிமைதான் என்று தீர்ப்பளித்து விடுகின்றனர்.

முதியவரின் கையில் காணப்படும் மற்றொரு ஓலை, முதலிலே கொடுத்த ஓலையைச் சுந்தரர் கைப்பற்றி கிழித்தெறிந்தவுடன் "அந்த ஓலை ஒன்றுதான் உளது என்று எண்ணாதே. அது வெறும் பிரதிதான். மூல ஓலை இங்கு என்னிடமே உள்ளது" என்று காட்டும் மூல ஓலையாக இருக்கலாம்

இவ்வாறு ஓவியத்தின் வாயிலாக ஒரு உன்னத நிகழ்ச்சியைப் படைத்துக் காட்டியுள்ள அச்சிற்பியின் திறனை எவ்வாறு புகழினும் தகும். வழக்காடும் நிகழ்ச்சியையும், மறையவர்களும் சுந்தரரும் என்ன செய்வதென்று அறியாமல் திகைக்கும் திகைப்பையும், முதியவர் தம் வழக்கு வெற்றி பெற்றது கண்டு பெருமிதத்தோடு நிற்கும் நிலையையும் காண்கையில் ஓவியன் தான் கேள்வியுற்ற பாட்டுக்கு வடிவம் தந்தானா அல்லது வடித்தெடுத்த வண்ண ஓவியத்துக்கு ஏற்பப் பாட்டமைந்ததா என்ற ஒரு சந்தேகத்தைத் தூண்டிவிடுகிறது இந்த எழிலார்ந்த ஓவியம்.

# பதியம் பாட பார்வை இழந்தோர்

கு. தாமோதரன் எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

இருபதாம் நூற்றாண்டில், அறிவியலில் ஆச்சரியப்படத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய சூழ்நிலையில், தமிழக அரசு கண் பார்வை இழந்தோர்க்குக் கண்ணொளி வழங்கிடவும், உடல் ஊனமுற்றோர்களுக்கு அரசுப் பணிகளில் முதலிடம் அளித்திடவும் முன்வந்து அரிய பணியை ஆற்றி வருகிறது.

இத்தகைய அரும்பணி இன்றைக்கு 865 ஆண்டுகளுக்கு முன்பாகவே நம் தமிழகத்தில், சோழர் காலத்தில் நடைப்பெற்றிருக்கிறது என்றால் நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அதுபற்றி தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்று இன்றளவும் நல்ல முறையில் காணப்படுகிறது.

தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம் திருவாமாத்தூரில் உள்ள 'ஆளுடைய அழகிய தேவர் கோயிலில்' சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கல்வெட்டு திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு திருப்பதியம் பாடியவர்களைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆளுடைய அழகிய தேவர் கோயிலுக்குத் தனிச் சிறப்பு உண்டு. ஏனெனில் இங்கு திருப்பதியம் பாடியவர்கள் பிறவிக் குருடர்கள். பார்வை தெரியாத, மற்றவர் பார்வைக்குத் தென்படுகின்ற புறக்கண்கள் இவர்களுக்கு இருந்தும் அவைகள் பயன்படாது போகவே அகக்கண்களால் இறைவனை உணர்ந்தவர்கள். இதன் காரணத்தாலோ என்னவோ திருப்பதியம் பாடும் பேறு பெற்றனர்.

திருப்பதியம் பாடும் பொறுப்பை பதினாறு குருடர்கள் வகித்து வந்தனர். இவர்களுக்கு வழிகாட்டும் பணிக்கு இருவர் அமர்த்தப்பட்டனர். திருப்பதியம் பாடுபவர்கள் குருடர்களாக இருந்த காரணத்தால், இவர்களுடைய உதவியாளர்களைக் கல்வெட்டு 'கண்காட்டுவார்' என்று குறிக்கிறது. எவ்வளவு பொருத்தமான சொல் இது. கண் இழந்துள்ள அவர்களுக்குத் தங்கள் கண்களின் துணையால், அவர்களுக்குக் கண்ணாக இருந்து வழி காட்டுவதால் 'கண்காட்டுவார்' என்று அழைக்கப்பட்டனர் போலும்.

கண் இல்லாதவர்கள் இவ்வுலகில் வாழத் தகுதி அற்றவர்கள் என்று கருதி புறக்கணிக்கப்பட்டார்கள். இவர்கள் வாழ்வில் இனி ஒளி இல்லை என்று கருதப்பட்டது. இந்த ஒளி இல்லாத விளக்குகளை சோழர்

காலச் சமுதாயம் புறக்கணித்ததா ? இல்லை. அப்பொழுது அமைந்திருந்த அரசும், அரசனும் இத்தகைய குருடர்களுக்கு வாழ்வளிக்கத் தவறவில்லை. திருப்பதியம் பாடுபவர்கள் குருடர்களாக இருந்தாலும் நன்கு கற்றறிந்த வர்கள் ஆதலால் அவர்களைப் புறக்கணிக்காமல் இறைவனுக்கு திருப்பதி யம் பாடும் பேற்றை அவர்களுக்கு அளித்தனர்.

திருப்பதியம் பாடிவரும் குருடர்கள் பதினாறு பேர்களுக்கும், கண் காட்டுவார் இருவருக்கும் சேர்த்து பதினெட்டு பேர்களுக்கு உணவுக்காக அளிக்கப்பட்ட நெல்லின் அளவு குறிக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு, ஆள் ஒன்றுக்கு பதக்கு நெல் வீதம் பதினெட்டு பேர்களுக்கு மூன்று கலம் நெல் அளிக்கப்பெற்றது. (ஒருபதக்கு - இரண்டு மரக்கால், பன்னிரண்டு மரக்கால் - ஒரு கலம்) முன்னூற்று அறுபது நாட்களுக்கு பதினெட்டு பேர்களுக்கு ஆயிரத்து எண்பது கலம் நெல் அளிக்கப்பெற்றது. ஒரு ஆளுக்கு என்பதைக் கல்வெட்டு 'பேரால்' என்ற சொல்லால் குறிக்கிறது. இதைக் கல்வெட்டு கீழ்க் கண்டவாறு குறிக்கிறது.

"திருப்பதியம் பாடிவரும் குருடர்கள் பேர் பதிநறுவரும் இவர் களுக்கு கண்காட்டுவார் இருவரும் ஆகப்பேர் பதிநெண்மர்க்கு பேரால் நெல்லு பதக்காக நாளொன்றுக்கு நெல்லு முக்கலமாக நாள் முந்நூற் றறுபதுக்கு நெல்லு ஆயிரத்தெண்பதின் கலமும் ...."

இது தவிர இவர்கள் அணிந்து கொள்வதற்கு ஆடை எவ்வாறு வழங்கப் பெற்றது என்பதையும் அறிய முடிகிறது. இதைப் 'புடவை முதல்' என்று கல்வெட்டு குறிக்கிறது. 'புடவை முதல்' என்பது திருப்பதி யம் பாடுபவர்களுக்கும், அவர்கள் உதவியாளர்களுக்கும், கட்டிக் கொள்ளும் துணிக்காகக் கொடுத்ததைக் குறிக்கிறது. 'புடவை' என்ற சொல் துணி அல்லது ஆடை என்ற பொருளில் வழங்கி வந்திருக்கின்றது. இதைச் சிதம்பரத்தில் உள்ள 'ஆடவல்லப் பெருமான்' கோயிலில் உள்ள முதலாம் இராஜேந்திரனின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டு (கி.பி. 11-ஆம் நூற்றுண்டு) கல்வெட்டு குறிக்கிறது. சாலைமடையன் (சமையல்காரன்) ஒருவனுக்கு உணவுக்காக ஆறு நாழி நெல்லும், அவனுக்கே புடவைக்கு (ஆடைக்கு) தனியாக நெல்லும் அளிக்கப் பெற்றது. இதே போன்று கோயிலில் பணி செய்யும் பெண்டுகள் ஐந்து பேர்களுக்கு உணவுக்காக குறுணி நெல்லும், அவர்களுக்கே புடவைக்கு பத்து கலம் நெல்லும் அளிக்கப்பெற்றது என்பதை நோக்கும் பொழுது 'புடவை' என்ற சொல் ஆண், பெண் இருவரும் உடுத்திக் கொள்ளும் ஆடையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இதே பொருளில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் 'புடவை' என்ற சொல் வழங்கி வந்ததிருக்கின்றது. ஆனால் இப்பொழுது புடவை என்ற சொல் பெண்கள் கட்டிக் கொள்ளும் 'சேலையை' மட்டுமே குறிக்கிறது.

புடவை முதலுக்கு ஆள் ஒன்றுக்கு மூன்று மாதத்துக்கு ஒரு காசு வீதம் ஆண்டொன்றுக்கு நான்கு காசுகள் வழங்கப்பெற்றன. அந்த

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

வகையில் பதினெட்டு பேர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு எழுபத்திரண்டு காசுகள் ஆகின்றன. ஒரு காசுக்கு இருபது கலம் நெல் வீதம் எழுபத்திரண்டு காசுகளுக்கு ஆயிரத்து நானூற்று நாற்பது கலம் நெல் அளிக்கப் பெற்றது. இந்த நெல்லுக்கு ஒரு வேலிக்கு நூற்று இருபது கலம் நெல் வீதம் பன்னிரண்டு வேலி நிலத்தைக் கைக்கொண்டு திருப்பதியம் பாடுவார் பதினெட்டு பேர்களும் மூன்று வேளையும் (மூன்று சந்தியும்) கோயிலுக்கு வந்து திருப்பதியம் விண்ணப்பஞ் செய்து வந்தனர் என்று கல்வெட்டு குறிக்கிறது.

அப்பர் பெருமான் தமது திருவாமாத்தூர் திருப்பதிகத்தில்

"பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்(கு)
அண்ணித் தாகும் அமுதினை ஆமாத்தூர்
சண்ணிப் பானைத்த மர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னனவன் காண்மினே"

என்று ஆமாத்தூர் இறைவனைப் பாடுகின்றார். பக்தியின் பெருக்கால் தன்னை வந்தடைந்து திருப்பதியம் பாடிய அடியவர்களுக்குக் கண்ணின் பாவையைப் போன்று விளங்குவான் என்று குறிப்பிடுகின்றார். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் திருப்பதியம் பாடும் குருடர்களுக்கு இவ்விறைவனே பார்வை அளிக்கும் பரம்பொருளாக விளங்கினானோ என்ற ஐயத்தை இப்பதியம் உண்டாக்குவது நோக்கத்தக்கது.

## இது என்ன?

ரட்டை புதையல்



இதைப்பற்றிய
இனிய செய்திகள்
இனி வரவிருக்கிறன.

# கொங்கு நாட்டில் வருணதேவன் வழிபாடு[1]

மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.,
அகழ்வாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

உலகில் பல பகுதிகளில் வாழும் ஆதிவாசிகளிடமும், உழவர்களிடமும் மழையை வேண்டி கடவுளை வணங்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இத்தகைய வழக்கத்தை தமிழகத்திலும் தொன்று தொட்டு காணலாம். மழை வேண்டி குறிஞ்சி நிலத்தில் உள்ள குறவர்கள் தெய்வத்தை வழிபட்டார்கள் என்பதனைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் கூறும். தமிழ் நாட்டில் மழையை வேண்டி செய்யும் சடங்குகளாக 'கொடும்பாவி கட்டி இழுத்தல்', 'மழைக் கஞ்சி எடுத்தல்' போன்ற வழக்கங்கள் இன்றும் உள்ளன.

இச்சடங்குகள் தொடர்பாக மக்கள் பல வாய்மொழி இலக்கியங்களையும் தொன்று தொட்டுப் பாடி வருகின்றனர். இவ்வாய்மொழி இலக்கியங்கள் இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப பல மாற்றங்களுடன் விளங்குகின்றன. பொதுவாக மழை பெய்யாத காலங்களிலும், மழை மிகுதியாக பெய்து மகிழ்ச்சி பெற்ற நேரங்களிலும், மழை தேவைக்கு மேல் மிகுதியாகப் பெய்து பாதிக்கப்பட்ட காலங்களிலும் கிராம மக்கள் பல நாட்டுப் பாடல்கள் பாடுவதுண்டு.

குறிப்பாக இக்கட்டுரையில் திருச்சி மாவட்டம், கருவூர்ப் பகுதியில் உள்ள நாட்டுப் பாடல்களும், அதுபற்றிய சடங்குகளும் இடம் பெறுகின்றன. இத்தகைய பாடல்களை, தமிழகத்தில் நாட்டுப் பாடல்களைத் தொகுத்தளித்த திரு. கி. வா. ஜகநாதன், திரு. பெ. தூரன், திரு. செ. அன்னகாமு, திரு. நா. வானமாமலை ஆகியோரின் தொகுப்பு நூல்களிலும் காணலாம்.

இத்தகைய வழிபாட்டுச் சடங்கிற்கு 'மாலக் கிண்ணிச் சோறு' என்றும் 'மழைக் கஞ்சி எடுத்தல்' என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

மழைக் கஞ்சி எடுக்கும் முறை:

தொடர்ந்து மழை பெய்யாதக் காலங்களில் கிராமத்துக் கன்னிப் பெண்கள் கூட்டமாக ஒன்று கூடி, சுடுமண் கலயத்தை கையில் ஏந்திக் கொண்டு வீடுதோறும் சென்று மழைக் கஞ்சி எடுக்கச் செல்வர். செல்லும் பொழுது தங்கள் வறுமையின் நிலையை தெளிவுபடுத்தும் பாடலை பாடுவர். அப்பாடலில் அவர்கள் வறுமையும், வருணன் வழிபாடும், வானிலை அறிவும் தெளிவாகக் காணலாம். துட்டுக்கு நெல் வாங்கி தோட்டம் தெளித்து வைத்து, வானத்தை நோக்க, வந்த மழைப் போகும் காட்சி

1. திருச்சி மாவட்டம் கருவூர்ப் பகுதியில் கட்டுரை ஆசிரியர் நேரிடையாக மக்களிடம் தொடர்பு கொண்டு தொகுத்தவை.

அவர்களை வாட்டமுறச் செய்கின்றது. வட்டிக்கு நெல் வாங்கி வயல் எல்லாம் தெளித்து வைத்து, வானத்தை நோக்க வந்த மழை செல்லும் குறிகள், ஏழை நெஞ்சங்களை வறுமையில் சுமை தாங்கியாக்குகிறது.

வானவீதியில் உள்ள ஒன்பது கோள்களில் 'வெள்ளி' என்ற சுக்கிரனைப் பற்றி பண்டு அறிந்திருந்தனர். சூரிய மண்டலத்தில் ஒளி மிக்க கோள் இதுவே ஆகும். வெள்ளி கோள் தென்திசை எழுதல் தீய நிகழ்ச்சியின் அறிகுறி என்றும், வெள்ளி கோள் வடதிசையில் நில்லாமல் திசை திரிந்து தெற்கேகின் நாட்டில் மழை பெய்யாது வற்கடம் உண்டாகும் என்றும் பண்டைய தமிழ் மக்கள் நம்பினர். இதனை சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

'இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்' -புறம்(35:7)

'தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்' -புறம் (117:2)

'வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயினில் காலை' -புறம் (388:1-2)

'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்' -பட்டிய (1-2)

'விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்' -சிலம்பு (10:103)

இவ்வாறு வெள்ளிக் கோளைப் பற்றி சங்க இலக்கியம் காட்டும் கருத்துக்களை இருபதாம் நூற்றாண்டில் கருவூர் பகுதியில் உள்ள கிராம மக்களின் வாய்மொழி இலக்கியத்திலும் காணலாம். அப்பாடலை நோக்குவோம்.

'கிண்ணியிலே மாக்கரைச்சி
கங்கையிலே கோலம் போட்டு
கோலம் கலையலியே
கொள்ளை மழை பெய்யலியே!

சட்டியிலே மாக்கரைச்சி
சாலையெல்லாம் கோலம் போட்டு
கோலம் கலையிலியே
கொள்ளை மழை பெய்யலியே!'

வட்டிலிலே மாக்கரைச்சி
வாசலிலே கோலம் போட்டு
கோலம் கலையிலியே!
கொள்ளை மழை பெய்யலியே!

வெள்ளி தென்தெசையில்
வெண்மேகம் வடதெசையில்
வெள்ளாமை நம்பி நிற்கும்
வெள்ளாளன் எத்திசையில்!

துட்டுக்கு நெல் வாங்கி
தோட்டம் தெளிச்சி வைச்சி
துட்டோ சுமருதய்யா
தொடுத்த மழை போயிடுச்சே!

வட்டிக்கு நெல் வாங்கி
வயலெல்லாம் தெளிச்சி வைச்சி
வட்டி சுமருதய்யா
வந்த மழை போயிடுச்சே !

கம்பம் பயிரெல்லாம்
கரையான் அரிக்காது
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா !

சோள பயிரெல்லாம்
சொக்கான் அரிக்காது
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா !

புஞ்சை பயிரெல்லாம்
பூச்சி அரிக்காது
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா ! 1

இத்தகைய கருத்துப் பொதிந்தப் பாடலே கவுண்டர் இனப்பெண்கள் பாடிக்கொண்டு, கஞ்சிக் கலயத்தை கையில் ஏந்தி வீடு வீடாகச் செல்வர். அப்பொழுது கிராமத்தினர் சோறு, கம்பஞ் சோறு, சோளக் கூழ், வரகுக் கூழ், அரிசிக் கஞ்சி முதலியவற்றை உப்பில்லாமல் கலயத்தில் இடுவர். இத்தகைய முறைக்கு மழைக் கஞ்சி எடுத்தல் எனப்பெயர். இத்தகைய வழக்கு கொங்கு நாட்டில் பிற பகுதிகளிலும் இருப்பதாக அறிகிறோம்.

வழிபாடு :

உப்பில்லாக் கஞ்சியை கலயத்தில் பெற்றுக் கொண்ட கன்னிப் பெண்கள் ஊரில் உள்ள பிள்ளேயார் கோயிலுக்கு எடுத்துச் செல்வர். பிள்ளேயாரை வணங்கி வழிபடுவர். கஞ்சிக் கலயத்தை கோயிலின் ஒரு பகுதியில் வைத்து, ஊரில் உள்ள கன்னிப் பெண்கள் எல்லாம் கலயத்தைச் சூழ்ந்து வட்டமாக அமர்வர். ஊரிலுள்ள வெள்ளேச் சேலேக்கார விதவைப் பெருமகள் அக்கலயத்தில் உள்ள உப்பில்லா கஞ்சியை அகப்பையில் எடுத்து எல்லாக் கன்னிப் பெண்களுக்கும் கொடுப்பாள். அப்பெண்கள் தம் இருகை குவித்து கஞ்சியை வாங்கிக் குடிப்பர். ஒவ்வொரு பெண்ணிற்கும் கஞ்சியைக் கொடுக்கும் விதைவை பெருமகள், தன் கையில் உள்ள அகப்பையால் எல்லோருடைய தலேயிலும் தட்டுவாள். இவ்வாறு வழிபாடு செய்வர்.

பூசை முடிந்து, வானேந்திரம் செல்லு முன் கஞ்சிக் கலயத்தைச் சூழ்ந்துள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து ஒப்பாரி வைப்பர். அப்பாடல்கள் கண்ணீரில் பூத்த கவிதை மலர்களாக விளங்குவதைக் காணலாம்.

பணத்துக்கு நெல் வாங்கி
பாடெல்லாம் நாத்து விட்டேன்
பத்தி நீங்க பாருங்களேன்

பத்தினியா புலம்பு வதை
பாடெல்லாம் வாடு வதை !

கடனுக்கு நெல் வாங்கி
காடெல்லாம் நாத்து விட்டேன்
கண்டு நீங்க பாருங்களேன்
கர்ணகியா கலங்குவதை
காடெல்லாம் வாடுவதை !

துட்டுக்கு நெல் வாங்கி
தோட்டமெல்லாம் நாத்துவிட்டேன்
தோப்பேறிப் பாருங்களேன்
தோகை மயில் புலம்புவதை
தோட்டமெல்லாம் வாடுவதை !

அசலுக்கு நெல் வாங்கி
அசலூரு நாத்து விட்டேன்
அண்டி நீங்க பாருங்களேன்
அருந்ததியா புலம்பு வதை
அசலூரு வாடுவதை !

ஏலத்துக்கு நெல் வாங்கி
ஏகதேசம் நாத்துவிட்டேன்
எட்டி நீங்க பாருங்களேன்
ஏந்திழையா புலம்புவதை
ஏகதேசம் வாடுவதை ! 2

விவசாயத்தையே நம்பியிருக்கும் ஏழை மக்கள் அசலுக்கும், பணத்துக்கும், கடனுக்கும், ஏலத்திற்கும் நெல் வாங்கி நிலங்களில் நாற்றுவிட்டு மழை இல்லாமல் பயிர்கள் வாடும்பொழுது அவர்கள் மனதில் ஏற்படும் துன்பச் சுமைகளை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

வானேந்திரம் செல்லுதல் :

பெண்கள் எல்லாம் கோயிலில் கூடி வழிபட்டு கஞ்சியைக் குடித்து முடித்த பிறகு, வெற்றுக்கலயம், அகப்பை, பிரிமனை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு ஊரின் எல்லையை தாண்டிச் தேசாந்திரம் செல்வர். இப்படி செல்வதை 'வானேந்திரம் செல்லுதல்', 'தேசாந்திரம் செல்லுதல்,' 'பரதேசம் செல்லுதல்' என்று பலவாறு அழைக்கிறார்கள். தேசாந்திரம் செல்லும் வழக்கம் பாண்டி நாட்லும் உண்டு. இப்படி செல்லும்பொழுது மழையின்றி வருந்தும் துயிரினை பாடலாகப் பாடுவர். அவற்றுள் ஒரு சில காணலாம்.

பூமியை நம்பியல்லோ வருணமகாதேவா !
புள்ளைகளை பெத்துவிட்டோம் வருணமகாதேவா !

பூமிசெய்யும் கோளாறு வருணமகாதேவா !
புள்ளதொந்தி வாடுதப்பா வருணமகாதேவா !

மானத்தை நம்பியல்லோ வருணமகாதேவா !
மக்களைப் பெத்துவிட்டோம் வருணமகாதேவா !

மானம் பண்ணும் கோளாறு வருணமகாதேவா !
மக்க தொந்தி வாடுதப்பா வருணமகாதேவா !

வேலித் தழைப்பறிச்சி வருணமகாதேவா !
விரலெல்லாம் கொப்புளங்க வருணமகாதேவா !

கள்ளி தழைப்பறிச்சி வருணமகாதேவா !
கையெல்லாம் கொப்புளங்க வருணமகாதேவா !

கொப்புளங்க புண்ணுற வருணமகாதேவா !
கோடிநாள் செல்லுதுங்கோ வருணமகாதேவா !

என்ற பாடலைப் பாடுகின்றனர்.

பின்னர் கஞ்சிக் கலயத்தை வெள்ளைச் சேலை உடுத்திய விதவை ஊரின் எல்லையிலோ, மந்தையிலோ அல்லது சுடுகாட்டிலோ போட்டு உடைப்பாள். அவ்வாறே அவர்கள் கொண்டுசென்ற அகப்பை, பிரிமனை, சட்டி முதலியவற்றையும் தூக்கி எரிந்துவிடுவார்கள். மந்தையை விட்டு ஊர் எல்லையை நெருங்கி வரும்பொழுது மறுபடியும் வருணதேவனை வழிபட்டுப் பாடுவார்கள். தெற்கே சென்ற வெள்ளி மீண்டும் வடக்கே வந்து வற்கடம் நீங்கி, வயல் எல்லாம் நீர் பெருகி வற்றாத வளம் பெருக வேண்டும் என்று வருணதேவனை வேண்டிப் பாடுவார்கள்.

பாஞ்சாங் கலப்பை வெட்டி
பஞ்சாங்க மேழி செஞ்சி
முகம் சோர்ந்து நிக்கிறுங்க
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா !
வடக்கே வெள்ளி வர
வயலெல்லாம் நீர் சொரிய
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா !

பொதுவாக இப்பாடலைப் பாடி அப்பெண்கள் கிராமத்தை அடையும் பொழுது மழை வந்துவிடுகிறது. அப்படி மழை பெய்யாவிட்டால் அவ்வூரில் உள்ள குடியானவர்களும், வாலிபர்களும் ஒன்று சேர்ந்து அப்பெண்களை ஊரின் எல்லைக்குள் வரவிடாமல் மறித்து நிறுத்துகிறார்கள். ஆனால் இவ்வழிபாட்டு சடங்கிற்குப் பிறகு பெரும்பாலான நேரங்களில் மழை வருவதாக நம்புகின்றனர். ஒரு சில நேரங்களில் வராமல் போவதும் உண்டு.

கிராம மக்கள் இறைவனிடம் கொண்டுள்ள பயமும் பக்தியும் எல்லையற்றது. மக்கள் நம்பிக்கை பெரும்பாலும் வீண்போவதில்லை. இவ்வருணதேவன் வழிபாடு மூன்று நாட்களிலிருந்து ஆறு நாட்கள் வரை சில கிராமங்களில் தொடர்ந்து நடைபெறுகிறது. இச்சடங்கு முடியும் ஆறு நாட்களுக்குள் மழை வந்துவிடுகிறது என நம்புகிறார்கள். மழை வந்தால் மீண்டும் மகிழ்ச்சி பொங்க ஊரில் உள்ள ஆடவர்கள் பாடி, அப்பெண்களை ஆரவாரத்தோடு ஊருக்குள் அழைத்துச் செல்வர்.

நாடு செழிச்சுடுத்து
நல்ல மழை பெஞ்சிடுத்து
ஊரு செழிச்சிடுத்து
ஒத்த மழை பெஞ்சிடுத்து
கொல்ல செழிச்சிடுத்து
கொள்ளை மழை பெஞ்சிடுத்து
கோளு திரிஞ்சிடுத்து
கோடை மழை பெஞ்சிடுத்து
காலம் செழிச்சிடுத்து
காரி மழை பெஞ்சிடுத்து
வாங்க ஆயா! வாங்க!!

இத்தகைய முறையில் மழைக் கஞ்சி எடுத்து வருணதேவனை வணங்கும் வழக்கம் கருவூரைச் சூழ்ந்து வடுகப்பட்டி, வெள்ளாளப்பட்டி, வாங்கல்பாளையம், வெண்ணமலை, நரிகட்டியூர், மூல காட்டானூர், ராமசரப்பட்டி ஆகிய ஊர்களில் காணலாம். இவ்வாறு கிராம மக்கள் மழையை எதிர்பார்த்து ஏங்குவதும், மழை பெய்தவன் மகிழ்ச்சியில் வருணதேவனை வணங்கிப் பாடுவதும் நல்ல நாட்டு இலக்கியங்களாகும்.

---

பாடலை அளித்தவர்கள் :

1. திருமதி. மாராயி, வடுகர்பட்டி, கருவூர் வட்டம்.
2. திருமதி. அரக்காணி, வடுகர்பட்டி, கருவூர் வட்டம்.
3. திருமதி. பழனியம்மாள், வெண்ணமலை, கருவூர் வட்டம்.
4. திரு. பிச்சை முத்து, வெள்ளாளப்பட்டி, கருவூர் வட்டம்.
5. திருமதி. பழனியம்மாள். வெண்ணமலை, கருவூர் வட்டம்.

---

# நிலச் சீர்திருத்தம் ஆங்கிலேயர் செய்ததா ?

"ஆங்கிலேயர் ஆட்சியில்தான் தென்னாட்டில் நில உடைமைகள், உழுதொழில் முதலிய அனைத்தும் சீர்திருத்தி அமைக்கப்பட்டன" என்ற ஒரு தவறான கருத்து நம்மிடையே உண்டு. அவர்கள் வருகைக்கு முன் அது எவ்வாறு இருந்தது என்று இதோ அவர்களே கூறுகிறார்கள்.

"The lands in general appear to have constituted a clear private property, more ancient, and probably more perfect, than that of England. The tenure, as well as transfer of this property, by descent, sale, gift and mortgage is fortified by a series of regular deeds, equally various and curious.........

The proprietary right, is either vested in individuals, or in co-parnerships of persons, each of whom possesses an unalienable interest in the estate, proportioned to the share of the property of which he has become possessed."

—The "Fifth report" of the Select committee on the affairs of the East India Company. vol. II; page. 77; London. 1812. India. 1866.



செப்புத் திருமேனி, கி. பி. 12-ம் நூற்றுண்டு
மேலப்பெரும்பள்ளம், தஞ்சைமாவட்டம்.
வட்டணை காட்டவந்த நாயகர், என்னும் தலைப்பைப் பார்க்கவும்

---

## உங்களுக்குத் தெரியுமா ?

வரலாற்றில் வடமதுரை என்று ஓர் ஊர் குறிக்கப்படுகிறது; அது எது? மதுரையின் வடபகுதி அல்ல. வடதேசத்தில் உள்ள மதுராவும் இல்லை. கொங்கு நாட்டுக்காரர் தங்கள் ஊரில் ஒரு வடமதுரை இருக்கிறது என்று கூறுகிறுர். அதுபோல இன்னம் பல இருக்கலாம். வரலாற்று வடமதுரை அவை அல்ல. சென்னைக்கு வடக்கே 37 கல்லில் அது இருக்கிறது. சுமார் 75000 ஆண்டுகளுக்கும் முன்னுல் அவ்வூரில் மனிதன் வாழ்ந்திருக்கிறுன்.

அது உங்களுக்கு எப்படித் தெரியும்? .... .... அடுத்த இதழில் கல்.

# இராஜராஜன்

## ஓர் ஆய்வு

இரா. நாகசாமி.

இராஜராஜன் தமிழ்த் தாயின் ஒப்பருந் தவப்புதல்வன். அவனது ஆற்றலை, அவன் விட்டுச் சென்றுள்ள அளப்பரும் கலைச்செல்வங்களை, அவனது ஆட்சித் திறனை, எங்கோ மூலையில் புற்றிட்டுக் கிடந்த திருமுறைகளைத் தேடி எடுத்து அளித்த பெருமையை, இன்னும் பல சிறப்புகளை நோக்கும்போது இம்மன்னன் இந்திய நாட்டிலேயே ஆண்ட மன்னர்கள் அனைவரிலும் தலையாயவன், சிறந்தவன், போற்றிப் புகழத் தகுந்தவன் என்பது தெளிவு. பல மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கிடைத்திருக்கின்றன. அவற்றில் பல அன்று ஆண்ட அரசர்களைப் பற்றியச் செய்திகளைக் கூறுகின்றன. ஆயினும் இராஜராஜனுடைய கல்வெட்டுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவற்றில் பலவற்றை இராஜராஜன் எழுதும்படி தானே ஆணையிட்டான். ஆதலின் அக்கல்வெட்டுகளிலிருந்து அம்மன்னனுடைய சிந்தனைகள் எவ்வாறு இருந்தன; அவன் செயலாற்றும் திறமை எவ்வாறு இருந்தது; அவனது தனித்தன்மை என்ன என்பதையும் மிகவும் தெளிவாக நாம் அறிய முடிகிறது.

தஞ்சையில் இராஜராஜன் எடுப்பித்த பெருங்கோயிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. இவற்றில் பல இராஜராஜனால் கொடுக்கப் பட்ட தானங்களை (பரிசுகளைக்) கூறுகின்றன. பிற மற்றவர்கள் அளித்த பரிசுகளைக் குறிக்கின்றன. இராஜராஜன் அளித்த பரிசுகளை மட்டும் நாம் ஆய்ந்தால் அம்மன்னனின் சிறப்பை தெளிவாக அறியலாம். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 'தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. இராஜராஜனது கொடைகள் அதில் இடம் பெற்றுள்ளன.

### கலன்கள் :

இதில் பல அன்று வழக்கிலிருந்த அடுகலன்களின் பெயர்களை நமக்குத் தெரிவிக்கின்றன. தளிகை, மண்டை, கெண்டி, தட்டம், குடம், ஒட்டுவட்டில், கலசம், படிக்கம், நெடுமடல், மானவட்டில், கறண்டிகைச் செப்பு, இலைச் செப்பு, தாரைத்தாள்வட்டில், ஈச்சொப்பிக்கை, இலைத் தட்டு, மூக்குவட்டகை, கைவட்டகை, வட்டில், பிங்காளம், கச்சோளம், சட்டுவம், நெய்முட்டை, குறுமடல் ஆகிய கலன்களின் பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்டவை.

இவற்றில் சில எவ்வாறு இருந்தன என்பதையும் இராஜராஜன் தெளிவாக குறித்திருக்கிறன். "தூக்கத்தில் தலையில் தைத்த பதினறு உட்பட பொன்னின் கொடிக்கருக்கு இரண்டும், சிங்கபாதம் இரண்டும் உட்பட தாரைத்தாள் வட்டில்' (இந்த வட்டிலின் தாள்கள் சிங்கக் கால்கள் போல் செய்யப்பட்டிருந்தன). 'மூக்கும், அடியும் உட்பட கலசப்பானை.' 'அடியும் மூழலும் உட்பட கறண்டிச்செப்பு.' "யாளிக்கால் நான்கும் மூழலும் உட்பட இலைச்செப்பு" என இம்மன்னன் தான் கொடுத்த சிறு பாத்திரங்களின் உருவங்களைக் கூட தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது போற்றத்தகுந்தது. ஒரு நெய்முட்டை கூட விட்டுவிடாமல் பதிவு செய்து வைத்துள்ளது எந்த அளவிற்கு கோயில் பொருள்களைக் காக்க வேண்டுமென்று பின்வரும் சந்ததியினருக்கு எடுத்துரைப்பது போல் விளங்குவதைக் காண்கிறோம். இவற்றை இராஜராஜன் பரிகலன்கள் என்று கூறுகிறன்.

இவற்றில் மற்றொரு சிறப்பும் உண்டு. இப்பரிகலன்கள் எங்கிருந்து வந்த பொருளால் செய்யப்பட்டவை என்பதைக் கூட இராஜராஜன் குறிக்கிறன். தன்னுடைய பண்டாரங்களிலிருந்து கொடுத்தவை எவை? சேரமானையும், பாண்டியர்களையும் மலைநாட்டில் தோற்கடித்து அங்கு பெற்ற பரிகலன்கள் எவை? சேரனையும், பாண்டியனையும் மலைநாட்டில் தோற்கடித்தபோது கிடைத்த வெள்ளியைக் கொண்டு இங்கு செய்து அளித்த கலன்கள் எவை என்பதையும் தெளிவாகக் குறித்துள்ளது வியக்கத்தக்கது. தன்னுடைய பண்டாரத்திலிருந்தும், மாற்றரசர்களை வெற்றி கண்டபோது கொண்ட பண்டாரங்களிலிருந்தும், கொடுத்த பொன்னுலான கலன்கள் எவை என்பதையும் தெளிவாகக் குறித்துள்ளான்.

இந்த கல்வெட்டுகளில் 'தளிகை ஒன்று' என்று பல கலன்கள் திரும்பத் திரும்ப எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஒரே வகையான கலன்களை ஏன் பலதடவை திரும்பத் திரும்ப எழுதவேண்டும் என்று கூட ஐயம் நமக்குத் தோன்றும். ஆனல் கல்வெட்டைச் சற்றுத் தெளிவாகப் பார்த்தால் இவ்வாறு எழுதியிருப்பதின் நோக்கம் தெரியும். ஒரே வகையைச் சார்ந்த கலமாக இருந்தாலும் அவற்றின் எடை வேறுபடுவதால் அவற்றைத் தனித்தனியாகக் குறித்துள்ளான். அது மட்டுமல்ல! மிக அதிக எடையுள்ள கலத்திலே தொடங்கி படிப்படியாக எடை குறைந்து வருகின்ற வகையில் அவற்றை வரிசைப்படுத்தி குறித்துள்ளதையும் காணலாம். உதாரணமாக ஒரு கல்வெட்டில் முப்பது தளிகைகளைக் குறித்துள்ளான். 983 கழஞ்சு எடையுள்ளதில் தொடங்கி 982, 981, 980, 978 என வரிசையாக எழுதப்பட்டுள்ளது எவ்வளவு கவனத்துடன் இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகும். இரண்டு கலன்கள் ஒரே எடை உடையவையாக இருந்தால் அவற்றை ஒரே வரியில் குறித்து விடுவதையும் காண்கிறோம். நெய் முட்டைக்குக் கூட எடை எடுத்து வைத்திருப்பது இன்னும் சிறப்பாகும்.

## "சிவபாத சேகரன்"

இராஜராஜன் தான் எடுப்பித்த கோயிலிலே தனது தெய்வத்தை பிரதிஷ்டை செய்து அதனுடைய வழிபாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துள்ளான். சிறந்த சிவபக்தனாதலின் தன் தெய்வத்திற்கு இராஜ ராஜேச்வரம் உடைய பரமஸ்வாமி எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தான். அந்த தெய்வத்தினுடைய புகழை, பெருமையை தான் என்றென்றும் போற்றி வணங்க வேண்டும் என்பது இராஜராஜனுடைய அவா. என்றென்றும் இராஜராஜேச்வரமுடைய பரமஸ்வாமியின் புகழை வெளி உலகத்திற்கு எடுத்துரைக்கும் அடியானாக தன்னை ஆட்படுத்திக் கொண்டான். அவன் பல காளங்களை இக்கோயிலுக்கு கொடுத்திருக்கிறான். அவை தங்கத்தால் செய்யப்பட்ட காளங்கள் ஆகும். இரண்டு குழல்களை உடையவை. அவற்றில் ஒன்றில் சிவபாதசேகரன் என்றும், மற்றொன்றில் ஸ்ரீ இராஜராஜன் என்றும் பெயர் பொறித்தான். தஞ்சைப் பெருங் கோயிலில் இனிது உறைகின்ற பரம்பொருளின் நாள்அணி விழாக்களில் இக்காளங்கள் ஊதப்படும்போது, அதன் மூலமாக 'இராஜராஜனும்,' 'சிவபாதசேகரனும்' அத்தெய்வத்தின் புகழை மக்களுக்கு எடுத்துரைத்தனர். அந்த அளவிற்கு இராஜராஜன் பக்திப் பெருக்கினால் சிவபிரானின் திருவடியை என்றும் மறவாத சிந்தையனாகத் திகழ்ந்தான் என்பதை இது நமக்குக் காட்டுகிறது.

## வெற்றி மலர் :

மாற்றரசர்களை வெற்றி கொண்டு தன் தலைநகருக்குத் திரும்பிய போது இராஜராஜன் செய்த முதற்பணி தன் தெய்வத்தின் முன்னிலையில் சென்று தங்கத்தினாலே பூக்களைச் செய்து தான் அடைந்த வெற்றிக்குக் காரணம் அப்பரம்பொருளே என்றும் அதுவே தன்னை வெற்றிக்கு ஊக்குவித்தது என்றும் இதயம் நெகிழ வணங்கி அதன் திருவடிகளில் பொற் பூக்களை அட்டித் தொழுதான். "சத்தியாஸ்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீ பாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன திருபொற் பூ ஒன்று-தாமரைச் செயல் திரு பொற்பூ ஒன்று" எனக் குறிக்கிறான். இவ்வாறு கொடுக்கப்பட்ட பூக்களும் கணக்கெடுக்கப்பட்டு எடை எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

## அணிகலன்கள் :

இராஜராஜன் பெருங்கோயிலிலே இருந்த செப்புத் திருமேனிகளுக்கும் பரம்பொருளுக்கும் அணிவிக்க ஏராளமான திரு ஆபரணங்களை அளித்திருக்கிறான். இவற்றில் திருப்பட்டிகை, முத்துவளையல், திருமாலை, ஸ்ரீசந்தம் முதலிய பல அணிகலன்கள் கொடுக்கப்பட்டன. அவற்றையும் மிக அழகாகவும், வரிசையாகவும் இராஜராஜன் பதிவுகளில் எழுதி வைத்திருக்கிறான். இவற்றை நோக்கும்போது இவ்வணிகள் எவ்வாறு செய்யப்

பட்டன, எவை எவை கொண்டு கட்டப்பட்டன என்பதையெல்லாம் அறிய முடிகிறது. இவ்வணிகலன்களை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான முத்துக்களை இராஜராஜன் பெரியவுடையாரின் திரு வடிகளிலே மலர்களாக அர்ப்பணித்து வணங்கினான் என்றும், அவற்றைக் கொண்டு இவ்வணிகள் செய்யப்பட்டன என்றும் அறிகிறோம் "உடை யார் ஸ்ரீ இராஜராஜதேவர், ஸ்ரீபாதபுட்பமாக அட்டித் திருவடி தொழுத" என்று ஒவ்வொரு அணியிலும் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். வட் டம், அணுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து, நிம்பொளம், பயிட்டம், அம்பு முது, கறடு, இரட்டை, சப்பத்தி, சக்கத்து, குளிர்ந்த நீர், சிவந்தநீர் என்ற பலவகை முத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளது அக்காலத்திலிருந்த முத் துக்களின் வகைகளை நமக்குத் தெரிவிக்கிறது. இவ்வணிகலன்கள், அவற் றின் நிறைக்கு ஏற்ப வரிசைப்படுத்தி பதிவு செய்யப்பட்டன. நிறை எடுக்கும்போது சரடும், சட்டமும் நீங்க, உள்ளே வைத்து செய்த அரக் கும், பிஞ்சும் சேர்த்து எவ்வளவு நிறை என்று கணக்கெடுக்கப்பட்டது. தக்ஷிணமேருவிடங்கன் என்று பெயர் பெற்ற ஒரு எடையால் (காசுக்கல்) நிறை எடுக்கப்பட்டது.

## நவரத்தினங்கள் :

இராஜராஜன் நவரத்தினங்களால் ஆன பல மோதிரங்களை அளித் திருக்கிறான். அவற்றில் முதலிலே குறிக்கப்படும் அணியில் நவரத்தினங் கள் எவை என்பதைத் தெளிவாக குறித்திருக்கிறான். வயிரம், நீலம், முத்து, புஷ்பராகம், கோமேதகம், பவழம், மரகதம், வைடூரியம், மாணிக் கம் ஆகிய ஒன்பதும் நவரத்தினங்கள் என்று அறிகிறோம். அடுத்துக் குறிக்கப்படும் நவரத்தின மோதிரங்களைச் சுருக்கமாக 'நவரத்தினம் ஒன் பது' என்று கூறி முடித்து விடுகிறான். இதிலிருந்து தான் குறிப்பவை களை எவ்வளவு தெளிவாகவும், குறிப்பாகவும் இராஜராஜன் எழுதி யுள்ளான் எனபதை அறியலாம்.

## திருப்பதியம் :

இக்கோயிலிலே வழிபாட்டின்போது தேவாரத் திருப்பதிகங்கள் பாடித் தெய்வத்தைப் பரவ வகை செய்தான் அதற்காக நாற்பத்தெண்மரை தேவாரம் ஓதுபவராக அமர்த்தினான். திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் என்று கூறுகிறான். திருப்பதியம் ஓதும்போது அவர்களுக்குப் பக்கவாத்திய மாக உடுக்கையும், கொட்டி மத்தளமும் வாசிக்கப்பட்டன. அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு மூன்று குறுணி வீதம் தஞ்சாவூர் பண்டாரத்திலிருந்து நெல் அளிக்கப்பட்டது. திருப்பதிகம் பாடுபவர்கள் திருநாவுக்கரையன், சம்பந்தன், செம்பொற்சோதி, சீருடைகழலான், சீராளன், திருஞான சம்பந்தன், எடுத்தபாதப்பிச்சன், சிவக்கொழுந்து ஆகிய எழில்மிகும் தமிழ்ப் பெயர் பூண்டு விளங்கினர். இதைத் தவிர இவர் அனைவரும் சிவதீக்கை பெற்றவர்கள். ஒவ்வொருவடைய தீக்கை பெயர்களும் குறிக்கப்பட்டுள்ள

தை இக்கல்வெட்டில் காண்கிறோம். இதிலிருந்து தெய்வத்தின் முன்னிலையில் தேவாரம் ஓதுவார்கள் சிவதீக்கை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்று முன்னர் கட்டுப்பாடு இருந்தது என அறியலாம்.

## தேவரடியாள் :

முற்காலத்தில் தெய்வீக வழிபாட்டின் அங்கமாக நாட்டியம் திகழ்ந்தது. பதினாறு அங்கங்களை உடைய வழிபாட்டு முறையில் கூத்து (நிருத்தம்) பதினைந்தாவது அங்கமாக குறிக்கப்படுகிறது. தாண்டவம் எடுத்துரைத்த தவச்செல்வர் சிவபெருமான் ஆதலின் அவர் உறைகின்ற கோயிலில் சுவர்களில் அப்பெருமான் ஆடிய 108 கரணங்களை (82 முடிவடைந்துள்ளன) சிற்பமாக செதுக்கி அமைத்த பெருமை இராஜராஜனையே சாரும். தில்லையிலே நடம் புரிகின்ற கூத்தப்பெருமானிடத்தில் எல்லையில்லா ஈடுபாடு கொண்ட இராஜராஜப் பெருந்தகை, தான் தோற்றுவித்த நடராஜப்பெருமானின் உருவங்களை 'ஆடவல்லான்' என்று அழைத்து அகமகிழ்ந்தான். தன் நாட்டில் வழங்கிய அளவுகளுக்கும் ஆடவல்லான் என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தான். இறைவன் ஆடிய ஆடலில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்த இப்பெருந்தகை தன் நாட்டிலே ஆடலில் சிறந்து பெரும் புகழ் எய்திய நானூற்றுக்கும் மேற்பட்ட நாட்டிய மகளிர்களுக்குத்தான் தோற்றுவித்த பெருங்கோயிலில் நாட்டியப் பணிபுரியும் பேறு அளித்தான். இந்நாட்டிய மகளிர்கள் பல்வேறு கோயில்களிலே நாட்டியப் பணி புரிந்து சிறந்தவர்கள். இவர்களில் பலர் ஆடவல்லாள், ஐயாறு, புகழி, பெற்ற திரு, பாவை முதலிய அழகிய பெயர்களைக் கொண்டிருந்தனர். இராஜராஜன் மீது ஆருத காதல் கொண்டிருந்த ஒருவள் 'இராஜராஜி' என்றே பெயர் கொண்டிருந்தாள்.

## தேவரடியாளாகத் தகுதி :

இவர்கள் கோயிலிலே கூத்தாடுபவர்களே ஆயினும் இவர்களது தொழிலுக்குத் தேவையான தகுதியை இவர்கள் பெற்றிருக்க வேண்டும். உரிய கல்வியும் பயிற்சியும் உடையவர்களே தேவரடியாளாகக் கோயிலில் பணிபுரிய முடியும். இவர்களில் யாராவது இறந்து விட்டால் அல்லது வேறு நாட்டிற்குச் சென்று விட்டால் இவரது அடுத்து வாரிசுகள் (அடுத்த முறை கடவார்) இப்பணியைச் செய்யலாம் என்று குறிக்கப்பட்டது. இவர்களில் வாரிசாக இருந்தாலும் உரிய தகுதி, கல்வி பயிற்சி இல்லாவிட்டால் (அடுத்த முறை கடவார் தாம் தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டு பணி செய்வித்துக் கொள்ளவும்) அவர்கள் பணி செய்ய முடியாது, ஆயினும் பணி தடைபடாமல் இவர்களே தகுதியுடைய வேறு ஆட்களை நியமித்து இப்பணி செய்யலாம் என்று இராஜராஜன் பணித்தான். இதிலிருந்து இரண்டு செய்திகளை அறிகிறோம். ஒன்று கோயிலில்களில் பணிபுரிவாரின் சந்ததிகளுக்கு வருங்கால வாழ்வுக்கு வழி வகுக்கப்பட்டது. வழிவந்தவர்கள் என்ற காரணத்தினாலேயே அவர்கள்

பணி செய்ய உரிமை உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சந்ததியாக இருந்தாலும் உரிய தகுதி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு தகுதி பெருவிட்டால் சந்ததியினரே வேறு தகுதியுடைய ஆளை அமர்த்திக் கொண்டு பணி செய்விக்கலாம். இந்த வாய்ப்பு மிகவும் இன்றியமையாதது. காரணம் சந்ததியினர் உடல் நலக்குறைவாலோ அல்லது பிறப்பிலே ஏற்பட்ட குறைகளாலோ வாழ வகையின்றி போய்விடக்கூடாது என்பதாகும். அவ்வாறு குறைபாடு உள்ளவர்களுக்கு அடுத்து வரும் தலைமுறை அப்பணியை செய்யக் கூடுமாதலின் அவர்களுக்கு இவ்வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று இராஜராஜன் கருதியிருக்கிறுன். இதிலிருந்து அவன் எந்த அளவுக்கு பணிபுரிவாரின் வாழ்விலும், அவர்களது சந்ததியாரின் வாழ்விலும், நலனிலும் அக்கரை எடுத்துக் கொண்டான் என்பது தெளிவாகிறது. அவ்வாறு அடுத்த சந்ததியினர் இல்லாது போய்விட்டால் பதிலாக தகுதி உள்ளவர்களை நியமிக்க கோயில் நிர்வாகத்தினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இவ்வாறு நாட்டியப் பணிபுரியும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஆண்டிற்கு 100 கலம் நெல் கொடுக்கப்பட்டது. 400-க்கும் மேற்பட்ட இந்த ஆடல் மகளிர்களுக்கு வசிப்பதற்கு என்று பல தெருக்களை அமைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் எண் இட்டு, எந்த வீட்டில் யார் இருந்தார்கள் என்பதையும் இராஜராஜன் கல்வெட்டு குறிக்கிறது. இவர்களுக்கு நாயகம் செய்ய சாலூர் பரஞ்சோதி என்பவரும் கோவிந்தன் சோமநாதன் என்பவரும் நியமிக்கப்பட்டார்கள்.

## நட்டவரும் இசைஞரும் :

இவை தவிர இவர்களுக்கு நட்டவம் செய்ய எழுவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் நிருத்தமாராயன், நிருத்தப்பேரையன் முதலிய பட்டம் அளித்து கௌரவிக்கப் பட்டவர்கள். இதைத் தவிர பல இசைக் கருவிகளை இசைப்பதற்கும் ஆரியம்பாடவும், தமிழ்பாடவும், கொட்டி மத்தளம் வாசிக்கவும், முத்திரைச்சங்கு ஊதவும், பலர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் பலர் இராஜராஜனது பல்வேறு படைகளிலே பணிபுரிந்தவர்கள். படையிலே இசைக் கருவிகள் இசைக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் இராஜராஜனது படையிலே மிகுந்திருந்தார்கள் என்பதை நோக்கும்போது எவ்வளவு சிறந்த பண்பட்ட படையாகத் திகழ்ந்தது எனக் கண்டு வியக்கிறேம். உதாரணமாக குழல் ஊதுபவன் குதிரைப் படையிலிருந்து வந்தவன். பக்கவாத்தியம் வாசிப்பவர் பலர் பல்வேறு வலங்கை வேளைக்காரர் படையைச் சேர்த்தவர்கள். கீழ்கண்ட படைகளிலிருந்து இசை வல்லுநர்கள் இப்பெருங் கோயிலுக்கு பணிபுரிய அமர்த்தப் பட்டனர்.

## இசை மிகுந்த படை :

1. நிகரிலி சோழத் தெரிந்த உடநிலை குதிரைச் சேவகர்.
2. மும்மடி சோழத் தெரிந்த யானைப்பாகர்.
3. அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

4. க்ஷத்திரிய சிகாமணி தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
5. சத்ருபுஜங்கத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
6. ராஜ கண்டீவத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
7. ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
8. அரிதுர்க்க வங்கணத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
9. மூர்த்த விக்ரமாபரண தெரிந்த வலங்கை வேளைக்காரர்
10. மும்மடி சோழத் தெரிந்த பரிக்காரர்.
11. ரணமுக பீமத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
12. விக்கிரமாபரவத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
13. இளைய ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

இவற்றிலிருந்து இராஜராஜனிடத்தில் மூலப்படையாக இருந்த படைகளின் பெயர்களையும் அறிகிறோம்.

## தொழிலாளியைப் போற்றிய இராஜராஜன் :

இதிலிருந்து வேறு சில செய்திகளும் அறிய முடிகிறது. உடுக்கை வாசிப்பவனுக்கு ஸ்ரீ ஹஸ்தன், சகஸ்ரபாகு என்று பெயர் இருப்பது தொழிலுக்கு ஏற்ப உள்ள பெயராகக் காணப்படுகிறது. பள்ளித் தொங்கல் பிடிப்பான், விளக்கு எடுப்பார், நீர்த் தெளிப்பார், கணக்கு, வண்ணத்தான், நாவிசம் செய்வார், அம்பட்டன் முதலிய பலர் இங்கு பணி செய்ய அமர்த்தப்பட்டுள்ளார்கள். தையான், ரத்தினத் தையான், கன்னன், தட்டான் முதலிய பல தொழிலாளிகளும் இக்கோயிலில் பணி புரிந்திருக்கிறார்கள். இக்கல்வெட்டிலிருந்து பல பெரும் சிறப்புகளை அறிகிறோம். இராஜராஜன் சிறு தொழிலாளிக்குக் கூட பெரும்பட்டங்கள் அளித்து அவர்களையும் இந்த திருப்பணியிலே ஈடுபடுத்தியிருப்பது அவனது பரந்த நோக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. தட்டானுக்கு பெரும் தட்டான் என்றும், தையானுக்கு பெருந்தையான் என்றும், நாவிதனுக்கு பெருநாவிசன் என்றும், கணிதம் வல்லானுக்குக் கணிதாதி ராஜன் என்றும், பள்ளித்தொங்கல் பிடிப்பானுக்கு தொங்கல் பேரையன் என்றும் இவன் பட்டங்கள் அளித்துள்ளது தொழிலாளி வர்க்கத்தினர் அறிந்து இன்புறத்தக்கது. பலருக்கு மாராயன், பேரையன், அரையன் முதலிய பட்டங்கள் கொடுத்து சிறப்பித்திருக்கிறான். அவன் கொடுத்த பட்டங்கள் அவரவர் தொழிலுக்கு ஏற்ப அமைந்திருக்கின்றன. அத்துடன் அரச பட்டப் பெயர் ஒன்றையும் இணைத்து கொடுக்கப்பட்டுள்ளது தொழில் புரிபவர்களை அரசன் எவ்வளவு உயர்ந்த நிலையிலே வைத்து மகிழமுடியுமோ அந்த அளவிற்கு சிறப்பித்திருப்பது இராஜராஜனின் தனிப் பெரும் தன்மைக்கு ஓர் எடுத்துக் காட்டு. இராஜராஜன் அளித்த சில பட்டப் பெயர்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

1. மும்முடிசோழ நிருத்தமாராயன்.
2. மும்முடி சோழ நிருத்தப்பேரையன்.
3. அருமொழி நிருத்தப் பேரையன்.

4. வகையிலி நிருத்தப்பேரையன்.
5. பஞ்சவன் மாதேவி நாடகமையன்,
6. நித்தவினோத வாத்யமாராயன்.
7. அறிஞ்சிகை காமரப்பேரையன்.
8. ராஜேந்திர தசரையன்.
9. இருமடிசோழ வாத்யமாராயன்.
10. ராஜராஜ ஸ்ரீஹஸ்தன்.
11. ராஜராஜ சஹஸ்ரபாகு.
12. செம்பியன் வீணை ஆதித்தன்.
13. மும்முடிசோழ தொங்கல் பேரையன். (திருத்தொங்கல் பிடிப்பான்).
14. செம்பியன் கொற்றப் பெருங்கணி.
15. ராஜராஜ கணிதாதிராஜன்.
16. ராஜராஜ ப்ரயோகத்தரையன்.
17. கேரளாந்தக பெருந்தையான்
18. வீர சோழ பெருந்தையான்.
19. க்ஷத்திரிய சிகாமணி பெருங்கன்னன்.
20. க்ஷத்திரிய சிகாமணி பெருந்தட்டான்.

முதலியவை ஆகும். இப்பட்டங்களின் இனிமை கண்டு இன்புறுக.

## தஞ்சைக் கோயிலைக் கட்டிய ஸ்தபதி:

இவ்வளவு சிறந்த கல்வெட்டில் இம்மாபெருங் கோயிலைத் தோற்றுவித்த சிற்பிகளின் பெயரைக் குறிக்காமலா இருப்பான்? அவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. சிற்பிகளின் தலைவனுக்கு தச்சாசார்யன் என்று பெயர். வீரசோழன் குஞ்சரமல்லனை இராஜராஜப் பெருந்தச்சன் என்பவன் இக்கோயிலில் தச்சாசார்யனாகக் குறிக்கப்படுகிறான். இவனுக்கு உதவியாக குணவன் மதுராந்தகனை நித்த விநோதப் பெருந்தச்சன் என்பவனும், இலத்திச் சடையனை கண்டராதித்த பெருந்தச்சன் என்பவனும் பணி புரிந்திருக்கிறார்கள். தற்காலத்தில் கோயில்களை நிர்மாணிக்கும் சிற்பிகளை ஸ்தபதி என்கிறோம். அவர்கள் அக்காலத்தில் பெருந்தச்சன் என்று பட்டம் பெற்று சிறந்தனர் என பல கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். ஆதலின் இராஜராஜனது பெயர் பூண்டு இராஜராஜப் பெருந்தச்சன் என்று அழைக்கப்பட்ட தச்சாசார்யனே வியத்தகும் தஞ்சைப் பெருங்கோயிலைத் தோற்றுவித்த தமிழகத்தின் தலையாய சிற்பி என்பதில் ஐயமில்லை.

இராஜராஜனது இக்கல்வெட்டில் மற்றொரு சிறப்பையும் காண்கிறோம். இராஜராஜன் இக்கோயிலில் பணிபுரிய சிலருக்கு ஆணையிட்டிருக்கிறான். அவர்கள் சில்காலம் இங்கு பணி புரிந்திருக்கிறார்கள். ஆனால் இக்கல்வெட்டுகளைப் பொறிப்பதற்குள்ளாக அவர்கள் இறந்து போய் விட்டார்கள். அப்பணியைப் பிறர் செய்தனர். ஆயினும் நிலையான கல்வெட்டில் முதலில் அமர்த்தப்பட்டவர்கள் இறந்துபோன போதிலும் அவர்களது

பெயரையும் குறித்து அவர்களுக்குப் பின் வந்தவர்களுடைய பெயரையும் கல்லிலே குறித்து வைத்துள்ள பெருமையைக் காண்கிறோம். கல்வெட்டு எழுதும்போது இறந்தவருடைய பெயரைக் குறிக்க வேண்டிய தேவை இல்லை. ஆயினும் "வீணை வாசிப்பார் இருவருக்கு சுப்ரமணியன் கூத்தனை செம்பியன் வீணை ஆதித்தனுக்கு பங்கு மூன்றரையும், இவன் செத்தமை யில் இவன் மகனைக் கொண்ட அரையன் சதாசிவனுக்குக் காணியாகவும்; பராந்தகக் கொங்கவாளில் கீர்த்தி நாதனுக்கு பங்கு முக்காலும் இவன் செத்தமையில் இவன் தம்பி கீர்த்தி கிளைதாங்கிக்கு காணியாகவும்'' என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து பணி செய்தவன் இறந்தபோதிலும் இராஜராஜன் அவனுக்கு எவ்வளவு பெருமை அளித்திருக்கிறான் என்று அறியலாம். இதுவும் இராஜராஜனுடைய பெருந்தன்மையின் எடுத்துக்காட்டு.

## கோயில் பொறுப்பு :

இக்காலத்தில் வங்கிகளில் பொருளாளர்(Cashier)களாகவும், கணக்காளர்களாகவும் நியமிக்கப்படுபவர்களிடத்தில் பிணைப்பு பணம் (Security Deposit) பெற்று பிறகுதான் அவர்களை நியமிக்கிறார்கள். இராஜராஜன் தான் எடுப்பித்த கோயிலிலே பண்டாரத்தையும், கணக்கை யும் வைத்துக் கொள்வார் எவ்வளவு சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதற்கு உள்ள கட்டுப்பாடுகளைக் கல்வெட்டில் குறித்திருக்கிறான். இப் பணிகளில் அமர்த்தப்படுபவர்களுக்கு நிலையான நிலம் (பூமி சம்பத்து) இருக்க வேண்டும். நல்ல நிலையிலே உள்ள சொந்தக்காரர்கள் (பந்து சம்பத்து) இருக்க வேண்டும். பொருள் (அர்த்த சம்பத்து) உடையவர் களாக இருக்க வேண்டும். கோயில் பொது மக்களுக்காக எடுக்கப்படும் ஒரு பொது ஸ்தாபனம். ஆதலின் அதன் செல்வத்தை நிர்வகிப்பவர்கள், அதன் கணக்கை வைத்துக்கொண்டிருப்பவர்கள், உயர்ந்த நிலையிலுள்ள வர்களாக இருக்க வேண்டும். அவற்றில் ஏதாவது தவறு நேருமானால், தவற்றை சரி செய்ய போதிய வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே இராஜராஜன் மேல் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை நிய மித்துள்ளான். அது மட்டுமல்ல, பரிசாரகம் செய்வார்களுக்குக் காசும், நெல்லும் பண்டாரத்தார்களும், கணக்கர்களும் உள்ளூர் பண்டாரத்தி லிருந்து கொடுக்கவேண்டும் என்றும், பண்டாரிகளும், கணக்கர்களும் தங் களுடைய ஊதியத்தை நாட்டுப் பண்டாரத்தில் சென்று வேறொருவரிட மிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பணித்தான். கோயில் கணக்கு எந்த அளவிற்கு சீராக இருத்தல் வேண்டும் என்று இராஜராஜன் நினைத்தான் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

## பெரும் பணி மக்களின் பணி :

தன் ஆட்சிக்கு உட்பட்ட பல ஊர்கள் இக்கோயிலில் பணிபுரியும் கணக்கர்களையும், திருமெய்காப்பாளர்களையும், பண்டாரிகளையும், பரிசார கர்களையும் நியமிக்க இராஜராஜன் வாய்ப்பளித்தான். இவ்வாறு நியமிக்கப்

பட்ட மெய்காப்பாளர்களுக்கு அந்தந்த ஊர்களே ஊதியம் தரவேண்டும் என்று நியமித்தான். தங்கள் ஊரிலிருந்து கோயிலுக்குப் பணிக்கு சென்று வரும்போது ஏற்படும் செலவுகளுக்கு படிச்செலவும் கொடுக்கவேண்டும் என்று நியமித்தான். இதிலிருந்து இராஜராஜனின் இன்னம் சில சிறந்த குணங்களை அறிய முடிகிறது. அவன் ஒரு மாபெரும் பேரரசன். அவன் நினைத்தால் துங்கபத்திரை ஆற்றங்கரையிலிருந்து ஈழம் வரையிலும் உள்ள பரந்த பகுதியிலிருந்து எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஆட்களை அவனே நியமிக்க முடியும். ஆயினும் அவ்வாறு செய்யாமல் தன் ஆட்சி யிலிருந்த பல்வேறு ஊர்ச்சபைகளே ஆட்களை நியமிக்க வாய்ப்பளித்தான். தஞ்சைப் பெருங்கோயிலைத் தான் தோற்றுவித்த போதிலும் அது அனைத்து ஊர்களுக்கும் பொது என்ற ஓர் எண்ணத்திற்கும், அனைத்து மக்களும் இக்கோயிலிலே நமக்கும் பங்கு உண்டு, இதன் நிர்வாகத்தில் நாமும் பங்கு ஏற்கிறோம் என்று பெருமை கொள்ளும் வகையிலும் ஒவ்வொரு ஊருக்கும் வாய்ப்பளித்திருக்கிறான் என்பதை நோக்கும்போது இராஜராஜ னுடைய உன்னதக் கருத்துக்கள் நமக்குத் தெளிவாகின்றன.

## அரசனது இறை ஆலயத்துக்கு :

தஞ்சையிலே தான் எடுப்பித்த இப்பெருங்கோயிலின் நடைமுறைச் செலவுகளுக்காகத் தனக்குச் சேர வேண்டிய இறையைக் கோயிலுக்கு அளக்க ஆணையிட்டான். பல ஊர்களிலே உள்ள நிலங்களை இவ்வாறு இக்கோயிலுக்கு தேவதானமாக அளித்தான். இந்த ஊர்களையும், அளித்த நிலங்களையும் குறிக்கும்போது மிகவும் தெளிவாகக் குறித்துள்ளான். ஓர் ஊரிலே உள்ள மொத்த நிலம் எவ்வளவு? அவ்வூரில் கோயில், குளம், இருக்கை முதலிய இறை கட்டாத நிலங்கள் எவ்வளவு? மீதி இறை கட்டின நிலங்கள் எவ்வளவு? அந்த நிலங்கள் அளந்த இறை "இராஜ ராஜதேவர் கொடுத்த ஊர் நத்தம், கோயில், குளங்கள், அவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூருக்குப் போன வாய்க்கால்கள், பறைச்சேரி, கம்மாளச் சேரி, சுடுகாடு முதலிய இறையிலி நிலங்கள் நீக்கி இறை கட்டின நிலத் தால் காணிக்கடன்" என ஆணையிட்டிருப்பதிலிருந்து அக்காலத்தில் வேளாண்துறை (துரவு) எவ்வளவு சிறப்பாக வகை படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டது என்பது புலனாகும்.

## ஆண்டானும் அடியானும் சமம் :

தஞ்சைப் பெருங்கோயிலில் விளக்கு எரிப்பதற்காக பல பொருள் களை இராஜராஜன் கொடுத்திருக்கிறான். அதை சில கல்வெட்டுகள் குறிக் கின்றன இக்கல்வெட்டிலிருந்து பல சிறந்த செய்திகளை நாம் அறிகிறோம். இக்கல்வெட்டில் பல உயர் அதிகாரிகளின் பெயர் குறிக்கப்பட்டுள்ளன. அவர்களது பெயர்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பெரும் பாலானவர்கள் கோழிப் போரிலே பங்கு கொண்டவர்கள். கோழிப் போர் மிகவும் கடுமையாக நடந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். தனது

படை வீரர்கள் கோழிப் போரிலே ஊனம் ஏதுமின்றி வெற்றி வாகை சூடித் திரும்பவேண்டும் என இராஜராஜன் வேண்டி பல விளக்குகளுக்கு வகை செய்துள்ளான். அவ்வாறு விளக்குகள் எரிப்பதற்கு பசுக்களையும், ஆடுகளையும், எருமைகளையும் அளித்திருக்கிறுன். இவற்றை வீரர்களுக்கு அளித்து அவ்வீரர்கள் அவற்றை இக்கோயிலுக்கு கொடுத்திருக்கின்றனர். "வில்லவன் மூவேந்த வேளான் தன்னை உடையார் இராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த" என்று குறிக்கப்பட்டுள்ளது இதை நமக்குத் தெரிவிக்கிறது. இதே போன்று பல வீரர்களுக்கும் குறிக்கப்பட்டுள்ளது. இராஜராஜன் விளக்குகள் எரிக்க தான் சில ஆடுகள் அளித்தான், அவன் படை வீரர்கள் சில அளித்தனர். ஒரு விளக்கு எரிக்க சாதாரணமாக 96 ஆடுகள் அளிக்கப் படுவது மரபு. இதற்கு இராஜராஜன், தான் 48 ஆடுகளைக் கொடுத்தான். மீதி 48 ஆடுகளை தனது படை வீரன் அளிக்க வாய்ப்பளித்தான். தானும், தன் படை வீரனும் இணைந்து இவ்விளக்கு எரிக்க வகை செய்ததை, தங்கள் இருவர் பெயரையும் குறித்து பெருமைப்படுவதிலிருந்து காண் கிறோம். தனது வெற்றிகளுக்கு காரணமாக உயிர் கொடுக்க முன் வந்த பெரும் வீரர்களுக்கு எவ்வித ஊனமும் ஏற்படக்கூடாது என்ற அவனது வேண்டுதலும், அவர்களுக்குத் தன்னுடன் சமநிலை அளித்த பெருமையும் இராஜராஜன் ஒருவனிடத்தில்தான் காண்கிறோம். வியத்தகும் பரந்த மனப்பக்குவம். இச்சிறந்த மன்னன் ஒரு விளக்குக்கு அல்ல பல விளக்கு களுக்கு தான் பொருள் கொடுத்தபோது தனது படை வீரனையும் கொடுத்த தாகக் கல்வெட்டில் பொறித்துள்ள பெருமையைக் காண்கிறோம்.

## பணிப் பெண்ணுக்கும் சம அந்தஸ்து :

படை வீரர் மட்டும்தானு? இல்லை. இல்லை. தன் கீழ் பணிபுரி கின்ற பணிப்பெண் கூட இதுபோல் விளக்குகளுக்குப் பொருள் கொடுக்கும் வாய்ப்பளித்து அவளுடைய பெயரையும் தனது பெயருடன் கல்வெட்டில் பொறித்துள்ள பெருமையைக் காண்கிறோம். "உடையார் இராஜராஜ தேவர் கொடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத்து இரண்டும் உய்யக் கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி (வேலைக் காரி) வரகுணன் எழுவத்தூர் திருவிளக்குக்கு வைத்த காசு" என குறிப் பிட்டுள்ள பெருந்தன்மையை, இராஜராஜனின் அளப்பரும் அன்புச் செல்வத்தைக் காணும்போது அவனுக்கு ஈடு இணையாக வேறு எந்த பேரரசனும் இருக்க முடியாது எனும் எண்ணம் மேலிடுகிறது.

**இராஜராஜனுக்குத் தோள் கொடுத்து உடன் நின்று பணியாற்றிய வீரர் :**

1. பெருந்தரம் உத்தரங்குடையான் கோன்வீதிவிடங்கனை வில்லவன் மூவேந்த வேளான்.
2. பெருந்தரம் மாராயன் இராஜராஜன்.
3. பெருந்தரம் கண்டாச்சன் பட்டாலகனை நித்தவினோத விழுப்பரையன்.

4. பெருந்தரம் ஆலத்தூர் உடையான் காளன் கண்ணப்பனுன இராஜகேசரி மூவேந்தவேளான்.
5. பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான்.
6. உடையார் இராஜராஜ தேவருக்கு நடுவிருக்கை செய்த இராஜேந்திர சிங்க வளநாட்டு மிறைக் கூற்று, காமரவல்லிச் சதுர்வேதி மங்கலத்து கோட்டையூர் பட்டன் பூவத்தன் பூவத்தனுர்.
7. பெருந்தரம் நித்தவினேத வளநாட்டு ஆவூர் கூற்றத்து செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனுன இராஜவித்யாதர விழுப் பரையன்.
8. உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர்.
9. உடையார் ஸ்ரீ இராஜராஜ தேவர் மும்மடி சோழத் தெரிந்த பரிவாரத்தார்.
10. சேநாபதி குரவன் உலகளந்தானுன இராஜராஜமஹாராஜன்.
11. மூலபரிவார விட்டேறுன ஜனநாதத் தெரிந்த பரிவாரத்தார்.
12. திருமந்திர ஓலை இராஜகேசரி நல்லூர் கிழவன் காருயில் எடுத்த பாதம்.
13. பெருந்தரம் உலோக மாராயன்
14. பெருந்தரம் இராஜகேசரி மூவேந்தவேளான்.
15. சோனகன் சாவூர் பரஞ்சோதி.
16. பெருந்தரம் வைரி சங்கரன்.
17. நித்தவினேத வளநாட்டு பாம்புணி கூற்றத்து அரைசூர் உடையான் ஈராயிரவன் பல்லவயனுன மும்மடி சோழ போசன்.
18. பெருந்தரம் நம்பன் கூத்தாடியான ஜெயங்கொண்ட சோழ பிரும்ம மஹாராஜன்.
19. பெருந்தரம் வயலூர்க் கிழவன் திருமலை வெண்காடன்.
20. பெருந்தரம் அருமொழி பல்லவரையன்.
21. பெருந்தரம் நித்தவினேத வளநாட்டு மஹாராஜன்.
22. பெருந்தரம் வயிரி அருமொழியான கரிகால கர்ணப் பல்லவரையன்.
23. பெருந்தரம் கோன் குற்றியான அருமொழிப் பல்லவரையன்.

**தஞ்சாவூர் புறம்படியில் இருந்த தெருக்களும், குடியிருக்கைகளும் தெருக்கள் :**

1. கந்தர்வத் தெரு.
2. மடைப்பள்ளித் தெரு.
3. வில்லிகள் தெரு.
4 ஆனையாட்கள் தெரு.
5. ஆனைக்கடுவார் தெரு.
6. பன்மையார் தெரு.

**பெருந்தெருக்கள் :**

1. இராஜவித்யாதரப் பெருந்தெரு.
2. வீர சோழப் பெருந்தெரு.
3. ஜயங்கொண்ட சோழப் பெருந்தெரு
4. சூரசிகாமணிப் பெருந்தெரு.

அங்காடிகள் :

1. கொங்கவாளார் அங்காடி.
2. இராஜராஜ பிரும்ம மஹாராராஜந் அங்காடி.

பேரங்காடி :

1. திரிபுவன மாதேவிப் பேரங்காடி.

வேளம் :

1. உத்தமசீலியார் வேளம்.
2. அபிமாந பூஷணத் தெரிந்த வேளம்.
3. உய்யக்கொண்டார் தெரிஞ்ச திருமஞ்சனத்தார் வேளம்.
4. இராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளம்.
5. அருமொழிதேவத் தெரிந்த திருப்பரிகலத்தார் வேளம்.

படைவீடு பிற :

1. சிவதாஸன் சோலையான இராஜராஜ பிரம்ம மஹாராஜந் படைவீடு.
2. ரௌத்தர மஹா காளத்து மடவிளாகம்.
3. பிரம குட்டம்.

தஞ்சாவூர் உள்ளாலையில் இருந்த தெருக்களும், குடியிருக்கைகளும் :

1. சாலியத் தெரு.
2. பாண்டி வேளம்.

இராஜராஜன் ஏராளமான செப்புத் திருமேனிகளை செய்து அளித் திருக்கிறான். அவற்றினுடைய உருவ அமைதியை, அவை கரங்களிலே கொண்டுள்ள சின்னங்களை, அவற்றின் எடையைக் குறித்துள்ள சிறப்பு அளப்பரும் சிறப்பாகும்.

“இராஜராஜப் பெருந்தகையே, தமிழகத்தின் தவச்செல்வமே, சிந்தனைத் தெளிவில், செயலாற்றும் திறனில், வெற்றிச் சிறப்பில், மக்கள் பால் கொண்ட பேரன்பில், கலை ஆர்வத்தில், அனைத்திற்கும் மேலாக பக்திப் பெருக்கில் உனக்கு ஈடு யார்? இணை யார்?” என வியந்து மகிழ் கிறோம். அவனது புகழ் கூறுவதிலே இன்பம் பெறுகிறோம். இது எங்கும் நிலைக்க இறை அருளை இறைஞ்சுகிறோம்.

# REFORMATION IN MATH PRACTICES

S. HARIHARAN, M.A.,
*Epigraphist, Dept. of Archaeology.*

Instances of influence of religious savants over heads of state are only too well known. The impact of Śaivaite saint Gñānasambandar on Pāṇḍya king Ninṛasīr Neḍumāṛan, that of Appar on Pallava Mahēndravarman I, that of Buddha's teachings on Emperor Aśōka are but a few examples. The various religious practices, besides influencing the course of history, themselves underwent certain transformations in their respective codes of procedure. A rare phenomenon has come to light in the practices of Pāśupata rites, a subdivision in Śaivaite faith.

In the sylvan surroundings of Thiru Ānaikkā there existed a Pāśupata math. A major break-through in the observance of Pāśupata vow was effected in the 16th Century, substantiated by an epigraph in the same temple. The epigraph is dated in Saka era 1506 (1584 A.D.) in the reign of Vijayanagara king Venkata I and is couched in high flown maṇipravāḷa style. The inscription states that the head of the Pāśupata math Pontiff without in the least sacrificing the duties of a householder. The epigraph bears ample testimonial references culled from various śāstras, in justification of such a relaxation. The inscription (No. 135 of Jambukesvaram) reported by C. R. Krishnamacharlu in 1940, in the Annual Report on South Indian Epigraphy for 1936-37 with editorial notes and rendering of the epigraph in Roman characters, has been dealt with by Dr. T V. Mahalingam in his article in the Journal of Oriental Research (Madras) Vol. 25 (1957). A dessertation of the same inscription by J. Duncan M. Derrett appeared in "Studies in Indian History and Culture" a felicitation Volume in honour of Dr. P. B. Desai.

The inscription opens with the statement that it is the tirumugam addressed to Chandrasēkhara guru by one Ādichaṇḍēśvaradēva, who describes himself as the mūla-bhṛitya of the god Tribhuvanapati in the temple. The operative part of the order falls into two parts. (1) Chandrasēkhara is his quality as "our tambiran" shall continue to perform and enjoy the rights and obligations of the worship of the deity, service of the idol, superintendence of the temple, drawing up of accounts, the right to mark devotees with the seal (muddirai), independence of management and the Pāśupata vow from preceptor to disciple in succession ; (2) he shall do this as a householder, performing the Pāśupata rights and the karmas of sacrifices, worshipping etc., for the god Jambunātha, but with succession

from father to son, on the basis of this order, as long as moon and sun endure, and upon that footing succession shall be to the son who is seniormost in age and learning and he should maintain his brothers and protect the endowment.

Then there follows a few excerpts from various texts in support of their action.

dīrgha kāla brahmacharyam dhāraṇam cha kamandaloh

narāśvamēdhu madhyam cha kalau varjyā dvijātibih

"Lengthy celibacy, the carrying of waterpots, sacrifices of human beings and horses, and spirituous liquor are to be avoided by twice-born in the Kali age". This quotation is attributed to Parāśara Saṃhita and the inscription adds that "a long period of celibacy is forbidden in the Kali age".

Two references, one each from Sanatkumāra Samhita and Saura Samhita are then quoted. These two argue that the traditional Pāśupata vow strictly adhered to and observed for a period of twelve years, the entire span being a period of celibacy as had been hitherto, can ably be practiced by a grihasta too.

" vratam Pāśupatam śuddham dvādasābdādi lakshitam

matbhakte tat pradātavyam mahesvara parāyaṇe

gṛhastēbhyō viśēshēṇa yatīnām tu agnivarjitam

aupāyanike vanhau srōtriya brahmachāriṇām

vāyavyē' tha Pāśupatam sākshāt vratam dvādasamāsikam.

These lines attributed to Sanatkumāra Samhita opine that the Pāśupata vow which lasts for twelve years should be committed to the devotees who is devoted to the servants of Maheśvara: especially to house-holders. Albeit the most orthodox brahmins can be initiated into the Pāśupata discipline, householders are preferable-thus claims the text.

dvādasābdam athābdam vā tad-arddham vā tad-arddhakam

prakuryyād dvādasāham vā saṅkalpyaitach sirōvratam

This verse attributed to Saura Samhita goes to prove that the Pāśupata vow can be accomplished in various periods, not neccessarily involving perpetual celibacy for twelve years, for half a year, or a quarter of it he must perform the head shaving ceremony or even with intention (devotion) for twelve days.

The inscription then recalls the names of Upamanyu, Dadhīchi, Agastya, Rāma and Krishna all house-holders and who have performed Pāśupata vow. After reference to Parāśara Samhita and Jābāli smriti, with of course the usual imprecatory verses, the inscription ends with a list of Brahmanas, signatories to the charter who held titles like paṇḍita, Nambi and bhaṭṭa besides temple accountants and treasurers and finally with a verse in praise of Chandrasēkhara, the Pāśupata guru himself !.

---



இது தமிழ்நாட்டுச் சிற்பம் அல்ல. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள சிற்பம். கங்கைகொண்ட சோழபுரத்தில் ( மெய்க்காவல்புத்தூரில் ) இப்பொழுது இருக்கிறது. கலிங்கநாட்டுச் சிற்பம் .வெற்றியின் சின்னமாகக் கொண்டுவரப்பட்டது.

# சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

ஐராவதம் மகாதேவன்

கருரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டுகளைக் கண்டறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும், அதை ஒட்டி உலகத் தமிழ்க் கருத்தரங்குகளில் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைப் பற்றி எழுந்த சுவையான விவாதங்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஆகும். அவற்றுள் சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1962-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலம் நான் கைத்தறித் துறை இயக்குநர் ஆகப் பணியாற்றி வந்தேன். தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு நூற்பு ஆலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தேன். அதே நேரத்தில்தான் ஓய்வு கிடைக்கும்பொழுது மலைச் சாரல்களிலும் சிறு குன்றுகளிலும் காணப்படும் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சேகரிக்கும் சொந்த முயற்சியிலும் ஈடுபட்டிருந்தேன். எனக்கு அப்பொழுது இரண்டு ஆசைகள் இருந்தன. ஒன்று, பொருள் விளங்கவில்லை என்று அறிஞர்களால் அநேகமாகக் கைவிடப்பட்டிருந்த தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சரிவர வாசிக்கும் முறையைக் கண்டறிய வேண்டும்; மற்றொன்று, சங்க காலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய எவ்விதமான புறச் சான்றுகளுமே தமிழகத்தில் கிடைக்கவில்லை என்ற குறை நீங்குமாறு அவர்களுடைய பெயர்களையோ மற்றக் குறிப்புக்களையோ இக்கல்வெட்டுகளில் காணவேண்டும் என்பனவாகும். இவ்விரு ஆசைகளும் நிறைவேறியது எனக்குக் கிடைத்த பெரும் பேறுகள் என்றே கருதுகிறேன். தமிழ் நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகள் தமிழிலேயே எழுதப்பட்டவை என்றும், அவைகளைப் பொருள் சிறக்க வாசிக்க ஒரு முறை இருக்கிறது என்றும் நான் கண்டறிந்த ஆராய்ச்சிகளைப் பற்றி இங்கு கூற இடமில்லை. சங்க காலத் தமிழ் மன்னர்கள் முதன் முதலாகத் தமிழகக் கல்வெட்டுகளில் தோன்றிய கதையை மட்டும் இங்கு கூறலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த தென்னிந்தியக் கல்வெட்டுகளைப் பற்றிய அறிக்கைகளில் 1927-28-ஆம் ஆண்டுகளின் தொகுதியில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகள் முதன் முதலாகக் கிடைக்கின்றன. இவ்வறிக்கையில் ஆறுநாட்டான் குன்றின் மீதுள்ள குகைகளுள் ஒன்றில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருப்பதாகவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைச் சரிவரப் படிக்க முடியவில்லை என்றும், அதில் ஆதன் என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மிகச் சுருக்கமாக ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டு மட்டுமே பொறிக்கப்பட்டவை. இந்நிலையில் நான்கு வரிகளாலான மிக நீளமானக் கல்வெட்டு-அதிலும் சேர மன்னர்களைக் குறிக்கக் கூடிய ஒரு கல்வெட்டு-கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் நாற்பது ஆண்டுகளாக வாசிக்கப்படாமல் இருந்து வந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. என்றாவது ஒரு நாள் நேரில் போய்ப் பார்த்து இக்கல்வெட்டைத் தீர ஆராயவேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

அந்த நாளும் 1965ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று வந்தது. அன்று கரூருக்கருகில் கட்டப்பட்டுவந்த கூட்டுறவு நூற்பாலையைப் பார்வையிடச் சென்றிருந்தேன். என் வழக்கப்படி கையுடன் அருகாமையிலுள்ள பழங்கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்புகளையும் எடுத்துச் சென்றிருந்தேன். அவற்றுள் ஒரு குறிப்பு மேற்கூறிய ஆறுநாட்டான் குன்றிலுள்ள கல்வெட்டுகளைப் பற்றியது ஆகும். நூற்பு ஆலையில் என்னுடைய அலுவல்களை முடித்துக்கொண்டு மாலை நேரத்தில் நானும் மற்றும் சில நண்பர்களுமாகக் காரில் ஆறுநாட்டான் குன்றின் அடிவாரம் வரை சென்றோம். அதற்குமுன் எங்களில் எவரும் அச்சிற்றூருக்குப் போனது இல்லை; மலையின் மீது ஏறக் கிழக்குப் பக்கத்திலிருந்து படிக்கட்டுகள் இருப்பது கூட எங்களுக்கு அப்பொழுது தெரியாது. பெரும்பாலும் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுக்கள் மனித சஞ்சாரம் அற்ற முள் புதர்கள் நிறைந்த குன்றுகளில்தான் இருக்கின்றன! அதே நினைவில் எவரையும் வழி கேட்காது குன்றின் தென்புறம் இருக்கும் ஒரு கரடுமுரடான சரிவின் வழியாக வியர்க்க விறுவிறுக்க குன்றின் மீது ஏறி உச்சியின் தெற்குச் சாரலை அடைந்தோம். மேலைக்கோடியில் தென்முகமாக இருந்த குகையின் உயரமான வாயிலுக்கு மேலாக வெட்டப்பட்டிருந்த பிராம்மிக் கல்வெட்டு மஞ்சள் நிறமான மாலை வெய்யிலில் பளிச்சென்று தெரிந்தது. கல்வெட்டு மிகவும் தேய்ந்துபோய் அங்கொன்றும் இங்கொன்றும் ஆகச் சில எழுத்துக்கள் மட்டும்தான் தெரியும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையத் தயாராகத்தான் வந்திருந்தேன். ஆனால் நான் கண்டது வேறு; மிகப் பெரிய எழுத்துக்களில் நான்கு நீண்ட வரிகளில் தெளிவாக பொறிக்கப்பட்டிருந்தது அக்கல்வெட்டு. முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துக்கள் நீங்கலாக ஏனைய எழுத்துக்களைப் படிப்பதும் எனக்குக் கடினமாகவே இல்லை. இந்தக் கல்வெட்டையா நாற்பது ஆண்டுகளாகப் படிக்க முடியவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்ற வியப்பு அன்று மேலோங்கியது; இன்றும் தணியவில்லை.

கையுடன் எடுத்து வந்திருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து கல்வெட்டை எழுத்துக் கூட்டி வாசித்த வண்ணம் படியெடுக்கலானேன். முதல் வரியில் புதுமை எதுவும் இல்லை; யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் உறையுள் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் ஏனைய தமிழ்ப்

பிராம்மிக் கல்வெட்டுகள் தரும் செய்திகள் போலவேயிருந்தது. அடுத்த வரிக்குப் போனேன்; இரண்டாவது வரியில் கோ என்ற முதல் சொல்லைக் கண்டவுடன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது; சங்க காலத் தமிழ் மன்னரின் கல்வெட்டுகள் இது என்பது உறுதியானது. மேலும் படித்தேன் இரண்டாம் வரியை ;

'கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்'

என்ற சொற்களைப் படித்தவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பையும் மகிழ்ச்சியையும் சொல்லி மாளாது! ஆனாலும் தமிழிலும் வரலாற்றுத் துறையிலும் ஈடுபாடு உள்ள அன்பர்களுக்கு எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தை விளக்க அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். அடுத்தடுத்து 'பெருங் கடுங்கோன்' 'இளங்கடுங்கோ' 'இளங்கோ' என்ற பெயர்களைப் படித்தபொழுது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சங்க நூல்களில் மட்டும் இதுவரை காணப்பட்ட பண்டையத் தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல் முறையாக ஒரு கல்வெட்டில் கண்டுவிட்ட ஆனந்தத்தில் நோட்டுப் புத்தகத்தை தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினேன். என்னுடன் வந்தவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள் !

என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய அக்கல்வெட்டின் முழு வாசகம் பின் வருமாறு:

"*....அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் [இ]ளங்
கடுங்கோ [இ]ளங்கோ ஆக அறுத்த கல்"

இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது; பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள்; இக்கல்வெட்டு ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது; இச்செய்திகள் மட்டும் எனக்கு அப்பொழுதே விளக்கமாகத் தெரிந்தன. அதற்குள் இருட்டி விட்டதால் மற்றக் கல்வெட்டுகளை இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம் என்று (கீழ்ப்புறம் இருந்த படிக்கட்டுகள் வழியாக!) இறங்கிக் கரூருக்குத் திரும்பினோம்.

நான் சென்னை வந்த அன்றே வரலாற்றுப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் வீட்டுக்குச் சென்று நான் எடுத்துவந்த கல்வெட்டுப் படியைக் காட்டினேன். அவர் அப்பொழுது என்னிடம் கேட்ட கேள்வி இன்றும் நினைவில் இருக்கிறது. "கையால் தானே எழுதியிருக்கிறீர்கள்; ஒழுங்காகப் படியெடுத்தீர்களா? என்று கேட்டார்! ஆராய்ச்சி முறைகளில் அவருக்கு இருந்த அழுத்தத்தையும் உண்மைப் பற்றையும் படிப்பினைகளாகக் கொண்டேன் அன்று. அதற்கு அடுத்த சில

நாட்களிலேயே கரூரிலிருந்த நண்பர்களின் உதவியால் அந்தக் குகை வாயிலில் மூங்கிலால் சாரம் கட்டி அதன் மீது ஏறி நின்று பாறையின் மீது மெல்லிய தாட்களைப் பரப்பி கல்வெட்டை எழுத்தெழுத்தாகக் கவனமாகப் படியெடுக்க ஏற்பாடு செய்தேன் (அப்பொழுது எடுக்கப்பட்ட படியின் நகல் தான் இக்கட்டுரையுடன் தரப்பட்டுள்ளது). அதற்குப் பிறகு ஒவ்வொரு முறையும் கரூருக்குச் செல்லும் பொழுதெல்லாம் புகளூருக்கும் 'தலயாத்திரை' சென்று ஆறுநாட்டான் குன்றிலிருந்த எல்லா பிராம்மிக் கல்வெட்டுகளையும் ஒன்றென்றாகப் படியெடுத்து முடித்தேன். அதே ஆண்டு மார்ச் மாதம் ஹிந்து தினத்தாளில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பையும் வெளியிட்டேன்.

பிறகு ஒரு நாள் என் ஆராய்ச்சிக் குறிப்புக்களை எடுத்துக்கொண்டு கோவையில் அப்பொழுது வசித்து வந்த திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்களைக் காணச் சென்றேன். அய்யரவர்கள்தாம் தமிழ் நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர். இக்கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய எழுத்துக்களான ழ, ள, ற, ன, ஆகியவை வருவதை முதன் முதலாகச் சுட்டிக்காட்டி இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் ஆனவை என்ற தவறான கருத்தை மறுத்து இவை தமிழில் தான் எழுதப்பட்டவை என்று நிறுவிய சீரிய ஆராய்ச்சியாளர் அய்யரவர்கள். வயது மிகவும் முதிர்ந்து, உடல் தளர்ந்து கண் பார்வை சரியாக இல்லாத நிலையிலும் புகளூர்க் கல்வெட்டைப் பற்றிய செய்திகளை தினத் தாள்களில் படிக்கக் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார் அவர். நான் அவர் முன் அமர்ந்தவுடன், 'சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள் தானா?' என்று கேட்டார். நான் ஆம் என்றவுடன் தன் கை விரல்களால் என் முகத்தைத் தடவிப் பார்த்தார்; அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது; 'நீங்கள் கொடுத்து வைத்தவர்' என்று ஆசி கூறினார். அப்பெரியவரின் கல்விப்பற்றையும் தூய உள்ளத்தையும் அன்பையும் நினைத்து நினைத்து என் உள்ளம் நெகிழ்கிறது.



# வட்டணை படநடந்த நாயகர்

*( 22-ஆம் பக்க படத்திற்கான கட்டுரை )*

பூம்புகாருக்கு அருகில் மேலப்பெரும்பள்ளம் என்ற ஊர் உள்ளது. இவ்வூர் திருவலம்புரம் என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டது. இது ஒரு பாடல் பெற்ற தலம். அப்பர் பெருமானின் அழகிய திருப்பதிகம் ஒன்று இவ்வூர் உறைகின்ற இறைவன் மீது உண்டு. அப்பதிகத்தில் இரு பாடல்கள் கீழ்வருமாறு உள்ளன.

*கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்*
*காலினாற் காய்ந்துகந்த காபாலியார்*
*முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி*
*முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்*
**தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார்** *தம்வாய்ச்*
*சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வௌவ*
*மறித்தொருகால் நோக்காதே மாயம் பேசி*
*வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.*

*பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்*
*பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ*
*இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்*
*கெவ்வூரீர் எம்பெருமா னென்றே னாவி*
*விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி*
*வேறோர் பதிபுகப் போவார் போல*
**வட்டணைகள் படநடந்து** *மாயம் பேசி*
*வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.*

இவ்வூர் கோயிலில் ஒரு அழகிய செப்புத்திருமேனி உள்ளது. இப் பெருமான் நீண்ட சடைமுடி தரித்தவராய், கையில் வீணை ஏந்தி முகத் திலே இளநகை பூண்டு, ஒரு காலை சற்று மடித்து, நடக்க முயல்வதுபோல் அமைக்கப்பட்டுள்ளது அத்திருமேனி. இவருக்கு அருகில் துள்ளி குதிக் கும் மான் ஒன்றும், மறுபுறத்தில் தலையில் தட்டம் ஏந்திய குள்ளபூதம் ஒன்றும் உள்ளன கையிலே வீணை தரித்து பிச்சை புகுகின்ற எழில் மேனியாக இவ்வுருவம் விளங்குகிறது. இவ்வுருவத்தைப் பார்த்து மேலே உள்ள பாடலையும் பார்க்கும் பொழுது இப்பாடல்களையே தியானச் செய்யுட்களாகக் கொண்டு வடிக்கப்பட்டது இவ்வுருவம் என்பது **தெறித்ததொரு வீணையாராய்,** மறித்தொரு கால் நோக்காதே **வட்டணை கள் படநடந்து** மாயம்பேசி, வலம்புரமே புகுகின்றாராக, அப்பர் பெருமான் பாடியுள்ள அதே திருமேனியாக இது விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.



வட்டணை படநடந்த நாயகர் என்ற ஒரு செப்புத்திருமேனி இரண்டாம் இராஜாதிராஜன் கல்வெட்டில் இவ்வூர் குறிக்கப்படுகிறது. கோயிலில் அப்பர் பெருமானின் பாடலைப் பாருங்கள். அவர் பாடலில் உள்ள சொற்களே கல்வெட்டில் குறிக்கப்படுவது கண்டு மெய்சிலிர்க்கிறது.

அப்பர் பாடலை அடிப்படையாகக் கொண்டு செப்புச் சிலையை வடித்தான் சிற்பி. அதே பெயரைக் கல்வெட்டில் கொடுத்து மகிழ்ந்தான் மன்னன். அற்புதமான சிற்பம்.

ஆசிரியர்.

முதற் பதிப்பு. 1974

தொ. பொ. ஆ. துறை வெ. எண் 34

ⓒ தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

கல்வெட்டு

விலை : ரூ. 1-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக அத் துறையின் அச்சகத்தில்

இத்துறையின் இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

ஆசிரியர்; இயக்குநர் இரா. நாகசாமி

## படித்தீர்களா ?

# இத்துறையின் புதிய வெளியீடுகள்

1. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள்
   பகுதி I & III — நடன. காசிநாதன்

2. POLITICAL GEOGRAPHY OF THE CHOLA COUNTRY — Y. Subbarayalu

3. SOUTH INDIAN MEGALITHS — Asko Parpola



கிடைக்குமிடங்கள்

|
V

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
3/4, தெற்குக் கரைச் சாலை,
மந்தைவெளி, சென்னை-600028.

திருமலை நாயக்கர் அரண்மனை — மதுரை.

அரசினர் அருங்காட்சியகம் — சென்னை

<*>